KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞு ஏப்ரல் மீ 5உ [No. 14

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 209
2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 211
3. கம்பராமாயணம்—(கட்புப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 214
4. நம்மாழ்வார் வைபவம்
(6-ம் பத்து, 5-ம், தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 216
5. சூளாமணி (நகரச் சருக்கம்) வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, B.A.B.L. 217
6. இரவொன்றிற் பல பிழைகள்
(அங்கம் 1. களம் 1.)
(Goldsmith's—She Stoops to Conquer) 218
7. ஸ்ரீதியாக ராஜ கீர்த்தன மணிமாலை
(ஓ ரங்கசாயீ பிலசிதே)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B.A. 220
8. மனிதவாழ்க்கை
R. G. நல்லகுற்றாலம் பிள்ளை B.A.B.L. 222
9. வர்த்தமானம் 224

கலாநிலயம்

கல்சரும் கவிதையும் 3.

பிறக்கின்ற எண்ணங்களை ஏற்று அவை தனித்தனி விவகரிக்குமாறு விடுவதும், அவ் வெண்ணங்களோடு அயலொன்றுங் கலவாமல், அவைதாம் ஒன்றோடொன்று தர்க்கமுறைப்படி தொடர்ந்துதோற்றுவிக்கும் முடிவை அடைவதும், மானுடமனத்ினது ஒருகூறாகிய பகுத்தறிவாமென்பதும்; மற்று, பண்டே தான்பழகியுள்ளவற்றுலெய்தியிருக்கும்வண்ணத்தையும் அவ்வெண்ணங்களோடுபண்புறக்கலந்துஅதனல் எய்தும் பயனில் நிலைத்தநோக்கமுடையதாய் இயக்குகின்றதிறம் மனத்தினது மறுகூறாகிய மனோபாவமாமென்பதும்; அவ்வறிவும்இத்திறமும் ஒவ்வொருவர்மாட்டும் ஒவ்வோரளவு பிறப்பு இயற்கையாய் அமைந்துள்ளனவென்பதையுஞ் செப்பலாயினேம்.இயற்கைக்கு இணங்கி யியங்குங்கால், மனிதன் தன்னைஉலகத்தினின்று பிரித்துக்கொண்டு விவகரிக்கவேண்டிய கருமங்களில் பகுத்தறிவும், தன்னைப் பிரபஞ்சத்துடன் சேர்த்துக்கொண்ட நிலைகளில் மனோபாவமும் வந்து உதவித் தத்தம் தொழில்களைப்புரிந்து அவனது வாழ்க்கையென்னும் துலாக்கோல் சாயாமல் நிமிராமல் சமமாக நிற்கவைக்கும். இயற்கையாய்ப் பெற்றனவாயினும் அவ்வாறுபெற்ற மற்றெல்லாவற்றையும்போல் பயிற்சியால் வளர்க்காவிடில் அவை இருந்தநிலையிலும் இல்லாதபடி அழிந்துபோகின்றன. உடலும்புத்தியும் ஒவ்வொருவருக்கும் இயற்கையாய் வாய்ந்தனவே. இவையிரண்டையும் தக்கமுறைகளில் பயிற்சிசெய்து போற்றுவிடத்து அவை தத்தமக்குரிய தொழில்களை ஆற்றுதற்கியலாமல்அழிந்திட யாவருங்கண்டுளர். புத்தியின்பாற்பட்ட பயிற்சியொன்றுமியற்றுமல் உடலை மாத்திரம் உரமுறச் செய்வதாலும், மற்று உடல்நிலை உணங்காவகை பயிலவேண்டியவற்றை மறுத்துப் புத்திக்கேபயிற்சியூட்டிவருவதாலும்விளையக்கூடியதீமைகளை இங்கு இயம்பவும் வேண்டுமோ! அஃதேபோல், மனத்திற்குரிய பகுத்தறிவு மனோபாவம் என்னுமிவ்விருபகுதிகளுக்கும் அவ்வவற்றிற் கியன்ற பயிற்சிகளைத் தளராமல் அளித்துவருவதில்லையாயின் இரண்டுமே இழிந்தேனும், ஒன்று இளைத்தேனும், போதல் திண்ணம். அவ்வாறு போகாமல் காக்கவேண்டியது யாவர்க்கும் கடன்.

1928வது ஆண்டின் முதலில் நாம், "கலாநிலயம் செய்யுங் கருமமும் செயல்வகையும்" என்னும் தலைப்பின்கீழ் எழுதியிருக்கின்ற தலையங்கங்களினென்றில் (வால்யூம்1 பக்கம்61) நூல்களை, தெரிவுநூல் அறிவுநூல் கல்விநூல் கருவிநூல் என்று நான்குவகைகளாகப் பிரித்து அவைகளின் இலக்கணத்தையும் கூறியுள்ளோம். கருவிநூல்கள் மற்றையமூன்றையும் பயில்வதற்கு ஆதாரமாயமைந்த பொதுத்தன்மை வாய்ந்தனவாதலால், அவையொழிய மற்ற மூன்றில் முன்னைய இரண்டும் பகுத்தறிவைப் பலப்படுத்தும் பயிற்சிக்குரியனவென்றும், மற்றது மனோபாவம்வளர்ந்துபெருகுதற்கேற்ற பயிற்சியாமென்றும்இங்குக் கொள்ளலாம். அக் கல்விநூல்களுக்கு ஆதாரமா யிருக்கின்ற சக்தியைக் கவிதை என்று இங்கு அழைக்கின்றோம்.

நடனங்கள்ஆடும்போதும் நல்லிசைபாடும்போதும் சித்திரங்கள் தீட்டும்போதும் சிலைகளைச் செதுக்கும் போதும் சொற்களைச்சேர்க்கும்போதும்மாந்தர்வரன்முறை ஒழுங்கொன்று அவைகளுக்கிடையே வழுவா

மல்லாடாடவைக்கின்றனர். இவ்வரன்முறைஒழுங்கு ஒரேவிதத்ததாயினும், அவ்வவர் தம் ஆட்டத்திலும் பாட்டிலும் படிவத்தைத் தீட்டுவதிலும் மொழிகளை இயக்குவதிலும் சிறிதுசிறிது பேதங்கள் இருப்பினும் இருக்கலாம். ஆயினும் பூரணமாய அவ் வரன்முறை ஒழுங்கென்பது இவ்வுலகாதிகளனைத்திற்கும், அவ்வுலகாதிகளைத் தழுவித்தோன்றும் தோற்றங்களனைத்திற்கும், யாவற்றிற்குமே அடிப்படையாய் அமைந்து இருப்பது ஒன்றேயன்றி வேறில்லை. இவ்வொன்றிய ஒழுங்கிற்கிணங்கி அதன் பிரதிகளாய்ப் பயில்கின்ற இசையை அசைவைப் படிவத்தைக் கேட்பவர்களும் காண்பவர்களும், பிறவற்றினின் றடைகின்ற உவகை உணர்ச்சியைவிடச் செறிவும் தூய்மையும் மிக்க உவகையை அடைகின்றனர். அத் தனிப்பெரும் ஒழுங்கிற்கும் அதன் பிரதிகளாகிய இவைகளுக்கும் வேற்றுமை குறையக் குறைய, அக்குறைவினை உணர்கின்ற உணர்ச்சியால் உண்டாகும் உவகை மிகுவதாகின்றது. ஏகமாய், மாற்றுதற்கு இயலாததாய் எங்கும் வியாபித்திருக்கின்ற அவ்வொழுங்கிற்கும் அவ்வொழுங்கை உள்ளக்கிடக்கையாகப் பெற்று எழலாகின்ற சங்கீதம் காவியம்சிற்பம் முதலியவைகளுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமையின் அளவினை ஒப்புநோக்கி உணரவல்ல உணர்ச்சியையே நாம் வழக்கத்தில் சுவை, என்னுமச் சொல்லால் குறிக்கலாகின்றோம். ஒருவன் தனக்குச் சங்கீதச்சுவை யில்லை என்றுரைக்கும்போது, நிகிலப் பொருள்கள் யாவற்றையு மூடுருவி இயக்குகின்ற அவ்வொருதனி ஒழுங்கின் தன்மையோடு இவ்விசையின் ஒழுங்கை ஒப்புநோக்கியுணரவல்ல பயிற்சியைப்பெற்றிலன் என்பதேகருத்து. காவியச்சுவை எய்தாதாரும் அத்தகையவரே. இவ்வொழுங்கை நாம் எத்துணைக்கு எத்துணை அதிகமாகஉணர்கின்றோமோ அத்துணைக்கு அத்துணை அதிகமாக நமது உவகையும் வளர்வதாகின்றது. இதன்மேல் இனி இல்லை என்னும்படி யமையப்பெற்ற ஒரு உவகைநிலைக்கும் அதற்குக் காரணமாகிய முழுமுதல் வரன்முறை ஒழுங்கிற்கும் நேர்ந்துள அவ்வுறவின் தத்துவந்தான் அழகு என்னப்படுவது. கலையின் இளமையில் ஒவ்வொருவனும் இவ்விணையிலாதமகிழ்ச்சி பிறப்பதற்குக்காரணமாயிருக்கின்றஅக்தத் தத்துவத்திற்குச் சற்றேறக்குறைய ஒத்திருக்கும்படி ஒழுங்கினைத் தன்தொழில்களில் அமைப்பவனாகின்றனன். இவ்வகை அமைக்கின்றசக்தி எவ்வெவர் மாட்டும்ஒவ்வோரளவுஉளது. எனினும்உண்டோ இல்லையோ என்னும்படி அத்துணைச் சிறியதாயின் அஃது இருந்தும்ஒன்றே, இல்லாததும் ஒன்றேயென எண்ண வேண்டும். மற்று எவரிடத்தில் இச்சக்தி தலைசிறந்து இயங்குகின்றதோ அவர்களே கவிகளாவார். இந்தச் சக்தியானது, தனித்தனிஎழுகின்றஎண்ணங்களை மனோபாவம், தன் வயமாக்கிய வெற்றியின் ஆட்சியேயன்றி வேறன்று. அத்தகைய சக்தியினால் ஆட்சிசெலுத்துவோர், மக்களுலகமும் இயற்கையமைப்பும் தங்கள் உள்ளத்தில் தூண்டிய எண்ணங்களை, மனோபாவம் தன்வண்ணத்ததாகத் திரித்துத்தந்தபடி அவர் சித்தரித்து உரைக்கின்ற முறையினால் எய்துகின்ற உவகையானது மற்றவர்களையுஞ் சென்றடைய லாகின்றது; அடைந்து அது 'பாஸ்பரம்' ஆகுமிடத்து இருமடங்காகப் பெருகவும் பெருகும். அவர்களின் மொழிகளெல்லாம் உருவகத்தையே தம் உயிராகப் பெற்றிருக்கும். உயிர்களுக்கெல்லாம்செல்லுறுகதியொன்றமைந்து அவை மேன்மேல் வளர்வதேபோன்று கவிதைக்கும் மேலுறு கதியொன்றுளது. ஒருவன் சந்திரனைப் பார்க்கின்றான். அவன் மனத்தில் உவகையொன்றுஉணரலாகின்றான். இவ்வுணர்ச்சி மறைந்தபின்னும் அதன்பயனை மனோபாவம் சேமித்து வைத்திருக்கின்றது. பின்னொருநாள் அவனே ஒருத்தியின்முகத்தை நோக்குகின்றான்; இது அழகுடையது என்னும்எண்ணம் உண்டாகின்றது. இந்தச் சமயத்தில்முன் சந்திரனைக்கண்டதன் பயனைச் சேமித்துவைத்திருக்கின்ற மனோபாவம் அவ்வெண்ணத்தைத் தன்வயப்படுத்திக்கொண்டு, சந்திரனைக்கண்டபொழுது உண்டான உவகைக்குக் காரணமாயிருந்த அழகுதான் இவள் முகத்தினது தோற்றத்திற்குங் காரணமாயிற்றெனப் புதியதோர் நினைவை விளைவித்து, ஒப்புநோக்கி உரைக்குமாறு அவனைத் தூண்டுகின்றது—மதிபோன்ற முகம் என்னலாகின்றான். இவ்வாறு கவிதையின் இளமையில், உவமமே அவனது உணர்வைத் தெரிவிக்க முன்வந்து உதவும். எனினும் சந்திரன்வேறு, முகம்வேறு என்ற பிரிவு இவ் வுவமக்கருத்தில் உளது. இனி இவ்வுணர்வும் மறைந்தபின், இவள் முகத்தைக் கண்டதனாலாய பயனையும், முன் சந்திரனைக் கண்டதனாலாய பயனைச் சேமித்தது போன்றே மனம் சேமித்துவைத்துக்கொள்கின்றது. இவ்விரண்டும் ஒருங்கே மனத்தில் பயிலப்பயில அவை வரவர நெருங்குவது இயற்கையே. நெருங்கிப் பின்னொருபோது இக்கருத்துத் தோன்றுங்கால் இடைநின்ற உவமஉருபு இற்றுப்போய் 'மதிமுகம்' என்னத் தன்னை விளம்பிக்கொள்ளலாகின்றது. கவிதையின் வளர்ச்சிமுறையில் இதனை இரண்டாவதுபடி என்னலாம். அதன்பின் இவ்வொற்றுமை இன்னும் வளரவளர, மதிமுகம் என்னுங்கால் முன்பின் அச்சொற்கள் வந்த வரிசையும் மிகையாகி மதியேமுகமெனுமுணர்வால் 'முகமதி' என்ன நேர்கின்றது. ஆதலின், வரன்முறைஒழுங்கிற்குரியநிலைஉலகமனைத்தும் ஒன்றே என்னும் அவ்வாய்மையின் ஒரு பகுதியாக இவ்வுருவகம் விளங்குகின்றது; இதனை மூன்றாம்படி என்னலாம். பின்னுமிச் சரித்திரம் செல்லச்செல்ல உரம்பெற்றுஉயர்ந்தமனோபாவம் சந்திரன் எண்ணமும் முகத்தினது எண்ணமும் ஆகிய இவையிரண்டையும் முற்றிலுந்தான் ஒருணர்வால் முகந்துகொண்டுவிட்டதால் இரண்டு பொருள்களாய் அவை இருத்தல்இனிமிகையாகின்றது. ஆதலால்“அவள் மதி நோக்கினேன்” என ஆகுபெயர் ஆகிவிடக் காண்கின்றோம். இதனால், கவிகள் பொருள்களுக்குள்ளநெருங்கிய உறவை உணர்வாராகி அவ் வுணர்ச்சியைப் பற்றி மேன்மேலுந்தொடர்கின்றார்களாதலால் அதனைத்தெரிவிக்க அவர்பயிலும் சொற்கள் காலஅளவில்அவரது எண்ணங்களின் பிரதிபதமாகஇருப்பதுபோக அவைகளின் ஒவ்வோர் பாகத்திற்கே அடையாளங்களாகின்றன. இவ் வடையாளங்கள்தாம் தற்குறிப்பேற்றமாகவும் உயர்வுநவிற்சியாகவும் இன்னவையனையபல்வேறு அலங்காரங்களென்றும் பெயர்பெறலாகின்றன. இவ்விதம் உருவகமொழிகள்தம் உள்ளக்கிடக்கையாய் உலகப்பொருள்கள் யாவற்றிலும் இழைந்திருக்கின்ற ஒற்றுமையுறவை உணர்கின்ற இக் கவிதாசக்தி, எவ்வகை அறிவிற்கும் பொதுவான உண்மையை வைத்துள ஓர் களஞ்சியம் என்று கூறலாம். கவியா யிருப்ப

தென்னில் மெய்ம்மையையும் அழகையும்கிரகிக்கின்ற தேயாகும். மெய்ம்மையையும் அழகையும் கிரகித்தல் என்பதன்பொருள் என்னையோவெனின், இப்பிரபஞ்சத்திற்கும் அதனை நாம் பொறிகளால்உணர்வதற்கும் உள்ள உறவினும், அவ் வுணர்விற்கும் அதனை உரைப்பதற்கும் உள்ள உறவினும் அமைந்திருக்கின்ற நன்மையைக் கிரகிப்பதன்றி வேறன்று. நமதுமொழியின் பிறப்பெல்லாம் ஆதியில் இந்தக் கவிதாசக்தியின் காரியமேயாகும். அகராதியின் அகலமும் இலக்கணங்களின் நுண்மையும் பிற்றைநாள் செய்திகள். கவிதையால் சிருஷ்டிக்கப்பட்டவைகளின் நினைவுக் குறிப்புக்களே அவை.

அழிவற்றதாய்எங்கெங்கும்நிலைபெற்றுள இவ்வரன்முறைஒழுங்கைக்கிரகித்து விளம்புகின்ற கவிகளென்போர் இயல் இசை நாடகங்கள் ஆக்குகின்றவர்மாத்திரமேயாவர் என்று எண்ணவேண்டா. தர்மசாஸ்திரங்களும்நீதிசாஸ்திரங்களும் நிறுவினோரும், வாழ்க்கைக் கலைநலம் கற்பிப்போரும், சமயநெறி வகுக்குமாற்றால் நம் சிந்தனைக்குச் சிறிதே எட்டவல்ல மேலுலக நோக்கத்தினை மெய்ம்மைக்கும் அழகிற்கும் அண்மியதாக்குமாறு புரிகின்ற ஆசாரியர்களும், கவிதாசக்தி சிறக்கப் பெற்றிருக்கின்றவர்கள் ஆவர். இவர்களும் உலகமனைத்திலும் ஊடுருவிநிற்கும் அவ்வொழுங்கின் ஒருமையைக் கிரகித்தவர்கள். கிரகித்துப் பின் அவ்வொழுங்கினிற்கு இணங்கி நமது வாழ்க்கை பிரதிபிம்பிக்கவேண்டுமாயின் நமது செயல்களும் சிந்தனையும் எவ்வகைப் பயின்றுதோன்றல்வேண்டும் என்பதையும் வகுத்துக் காட்டுகின்றனர். இலக்கியக் கவிகளாயினும் மற்றெவ்வகைக் கவிகளாயினும், அவரெலாம் ஏகமாய் எல்லையற்றதாய் என்றுமுளதாகிய ஒன்றில் தாமும் கலந்து கொள்ளுந் தன்மையர். அவர்வரையில் காலம் இடம் எண் என்ற வரையறை அவர்களுக்கிலது. ஆதிவேதமேனும் என், மனுதர்ம சாஸ்திரமாயின் என், கிறிஸ்தியர் பைபில் ஆயின் என், மகம்மதியர் கொரான் ஆயின் என், வள்ளுவர் குறளாயின் ஷேக்ஸ்பியர் நாடகமாயின் என், பிளேடோ குடிவாழ்க்கைக் கொள்கைகளை விளக்கிய 'ரிபப்ளிக்' ஆயின் என், கம்பரது இதிகாசமாயின் என், காளிதாசன்ரகுவம்சம்ஆயின்என், இன்னபடியே பிரபஞ்சத்தை உணர்ந்து உரைக்கின்ற உறவினில் உள்ள நன்மையை மெய்ம்மையென்றும் அழகென்றும் வெவ்வேறு பேரினல் விளம்புவனவேனும் வரன்முறைபொழுங்கைக் கிரகிக்கின்ற அக் கவிதாசக்தியால் அவை யாவும் நிகழ்கின்றனவாதலால் அத்தனையும் காவியங்களே.

தமிழ்ப்பாடம் 114.

வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[198-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்

தூதனைப் புறப்பட்ட கிருஷ்ணன் அஸ்தினபுரம் போய்ச் சேருகின்றதைப்பற்றிய பாடல்கள் இருபது இடையே விடலாயின.

* * *

அன்று தூதுகொண் டிலங்கை தீவிளைத்தவ ரைவர்க்
கின்று தூதுவந் தெயிற்புறத் திறுத்தன ரென்னுந்
துன்று தூதுவண் டினமுர றொடையலான் றனக்குச்
சென்று தூதவ ரியம்பினர் சேவடி வணங்கி. 37.

அத்தினபுரத்திற்கு அயலில் கண்ணன் வந்து தங்கியிருக்கின்றார் என்று தூதுவர் போய்த் துரியோதனனிடந் தெரிவிக்கின்றனர்.

பதவுரை.

தூது-பரவுகின்ற வாசனையாகிய தூதினல் அழைக்கப்பட்டு வந்து, துன்று - நெருங்கிய, வண்டு இனம்-வண்டுக்கூட்டங்கள், முரல்-ஒலிக்கப்பெற்ற, தொடையலான் தனக்கு - மாலையையுடைய துரியோதனன் இடத்தில், தூதவர்-தூதர்கள், சென்று-போய், சே அடி - சிவந்தபாதங்களை, வணங்கி - வணங்கி,

அன்று - முன்னொருபோது (இராமாவதாரத்தில்) தூதுகொண்டு-(அநுமனை) தன் தூதனக அனுப்பி, இலங்கை-இலங்கையிலே, தீ விளைத்தவர் - நெருப்பு வைத்தவர், இன்று - இப்பொழுது, ஐவர்க்கு - பாண்டவர்களுக்கு, தூது வந்து - தானே தூதுபேச வந்து, எயில் புறத்து-மதிலுக்கு அப்புறத்தில், இறுத்தனர் - தங்கியிருக்கின்றார், என - என்று, இயம்பினர்-உரைத்தனர்.

விரிவுரை:-துரியோதனனது கொடுமைகளைப்பார்த்துவருபவர் எல்லாரும், அழிவு அவனுக் கொருநாள் வந்தேதீருமென்பதைஐயமறஅறிவார். அவனது சாரணர்களும் அதனை உணரவல்லவர்ளே. கண்ணன் தன் காலடி வைத்ததும் தீயோர் மாயவாழ்வு தொலையத் தலைப்பட்டது என்று தேறினர். ஊக்கமும் பிறந்தது. பிறந்த அவ்வூக்கத்தை ஒளிக்கவும் நினையார்போல் தம் தலைவன்பால் விரைந்துவந்து, முன்னே தூதனையனுப்பி இராவணன்தன் தொன்னகரைத் தீக்கிட்டு அழித்த ஒருபெருமான் இன்று தானே உன்னூர்க்கு வந்துளான் எனப்பகர்ந்தனர். வந்திருக்கும்கண்ணன் தான் இன்னனென இயம்புவதன்றிவேறொருபொருளும் இதனில் இல்லைபோல் தோன்றினும், "முன் ஓர் அரக்கன் கொடுந்தொழில்கள் புரிந்து வாழ்ந்தான். அவனுக்குத் தன் தூதனைக்கொண்டு முன்னறிவுபுகட்டினன் இக் கண்ணன்; கொழுந்தியைத் துகிலுரித்த நீயோ அவ்வரக்கனிலும் கொடியனுதலால் உன்னைத் தண்டிக்கத் தானே வந்திருக்கின்றனன். இனி, தலைகள் தோறும் முடியுடை அரக்கனது வாழ்வு போயவழி வணங்கா வொருமுடி நின்வாழ்வும் ஒழிதற் கிருக்கின்றது" என்னும்உட்கருத்து 'அன்று தூதுகொண்டு இலங்கை தீ விளைத்தவன்' என்ற கருத்தில் அடங்கியிருப்பதால் இது கருத்துடை அடை அணி யாகும்.

தீயவர் வீழ்வதில் யாவருக்குமோர் ஊக்கம் உண்டாவது இயற்கையே. அவ்வீழ்ச்சியில் தாமுமே அகப்பட்டுத் தொலையவேண்டி நேருமென்பது தெரிந்தாலுங்கூட, அன்னவர் ஊக்கம் குறைவுபடுவதில்லை. போர்தொலைந்துநின்ற இராவணன் ஏவலால் கும்பகர்ணனைத் துயிலெழுப்பச் சென்ற கிங்கரர்கள்.—

உறங்கு கின்ற கும்பகன்ன வுங்கண்மாய வாழ்வெல்லாம்
இறங்கு கின்ற தின்றுகா ணெழுந்திரா யெழுந்திராய்
கறங்கு போல விற்பிடித்த காலதூதர் கையிலே
உறங்கு வாயு றங்குவா யினிக்கிடந் துறங்குவாய்

என்று எழுப்பினர் எனக் கம்பர் கூறுவார். "தூங்கிக்

கிடக்கின்ற கும்பகர்ணனே, நீங்கள் இதுகாறும் நிச்சயமென்று வாழ்ந்துவந்த மாயவாழ்வெல்லாம் இன்று முதல் தொலையத் தலைப்படுகின்றது; எழுந்திரு, எழுந்திரு. வில்லொன்றைக் கையில் ஏந்திக் காற்றாடியைப் போலச் சுழன்று நம்மை அழித்துவருகின்ற காலதூதன் கையிலே நெடுநாள் இனி நீ நீங்காத நித்திரையில் கிடந்து தூங்குவாய், நிச்சயம். இப்பொழுது எழுந்து வா.'' என்பது இந்தச் செய்யுளின் பொருள். தூங்குகின்றவனிடத்தில் சொன்னவர்களாதலால் அவர்தம் வெறுப்பு வெளிப்படையாகவே விளம்பப்பெற்றது. துரியோதனனது தூதர்களோ இங்கு அத்துணைவெள்ளையாய் நேராக விளம்பத் துணிந்திலர். இவ்வளவே வேறுபாடு.

எம்பெருமான் வந்தனன் என்பதுகேட்ட துரியோதனனது கட்டளையால், நகரடங்கலும் அலங்கரிக்கப் பெற்றது.

மின்னு மாமுகிற் பல்லிய விதங்கண் முன்முழங்க
மன்னர் மன்னவ னெழுந்தனன் மாலெதிர்கொள்வா
னென்னை நீயவற் கெதிர்செல்வ தென்றுதன் மருகன்
தன்னை வன்பொடு தகைந்தனன் கொடுமைகூர் சகுனி

கண்ணனை எதிர்கொள்வதற் கெழுந்த துரியோதனனைச் சகுனி தடுக்கின்றான்.

பதவுரை.

மன்னர் மன்னவன்—அரசர்க்கு அரசனான துரியோதனன், மால்-திருமாலை, எதிர்கொள்வான்-எதிர்கொள்வதற்கு, மின்னும் - மின்னலை வீசுகின்ற, மாமுகில் - பெரிய மேகம் இடிப்பது போல, பல் இயம் விதங்கள் - பலவித வாத்தியங்கள், முன் முழங்க—முன்னே ஒலிக்க, எழுந்தனன்-புறப்பட்டான். (அப்பொழுது) கொடுமை கூர்-கொடுமை மிகுந்த, சகுனி-சகுனியானவன், அவற்கு - அவனுக்கு, நீ - துரியோதனன் ஆகிய நீ, எதிர் செல்வது என்னை-எதிர்கொண்டழைக்கப்போவது ஏன், என்று-என்று, வன்பொடு-வன்மையோடு, தன் மருகன் தன்னை-தனது மருமானை, தகைந்தனன்-தடுத்தான்.

விரிவுரை: —துரியோதனனும் சகுனியின் சொற்கிணங்கிச் சும்மா இருந்துவிட்டான். ஆயினும் கடவுளை எதிர்கொளச்சென்ற இவனைக்கெடுத்தது கொடிய சகுனியே என்றுகூறுவதும் நேரிதன்று. அவன் இயற்கையிலேயே கொடியவனுதலாற்றான், தன்னையேசிறிது மறந்து ஏதோ உள்ளம்தூண்ட உற்றெழுந்தானை யும், சகுனி 'அரசர்க்கரசனாகிய நீ கடவுளை வழிபடச் செல்வது, உன் மரியாதைக்கு ஏற்றதன்று' என்னக் காட்டியதும், இது தக்கதே யென்று அணுவும் விலகாமல் உடன்பட்டான். தீயவனான சகுனியின் சேர்க்கையால் துரியோதனன் கெட்டனன் என்பது அமையுமாயின், முன், மற்றொருமாமன் மாரீசன் புகட்டிய நன்னெறியை அவன் மருகனும் இராவணன் கைக்கொண்டிருக்கலாமே.

சீர்வ லம்புரி திகிரிசேர் செங்கையான் றனக்குக்
கார்வ லம்புரி கோயிலுங் காட்சியு மமைத்துப்
போர்வ லம்புரி நிருபரு மிளைஞரும் போற்றத்
தார்வ லம்புரி யவனிருந் தனன்பொலந் தவிசில் 39.

சகுனி தடுக்கவே துரியோதனன் எதிர்கொள்ளச் செல்லாமல் தன் மனையிலே தங்கிவிட்டான்.

பதவுரை.

சீர் - சிறப்புடைய, வலம்புரி - பாஞ்சசன்யம் என்னும் வலம்புரிச் சங்கும், திகிரி-சக்கரமும், சேர்-கொண்டுள்ள, செம் கையான் தனக்கு - (தாமரை போன்ற) சிவந்த கைகளையுடைய கண்ணபிரானுக்கு, கார் - மேகம், வலம்புரி - வலம்வரும்படி உயர்ந்த, கோயிலும் - அரண்மனையும், காட்சியும் - அலங்காரமும், அமைத்து - ஏற்படுத்தி, போர் வலம் புரி - யுத்தத்தை வல்லமையோடு புரிகின்ற, நிருபரும் - அரசர்களும், இளைஞரும் - தனது தம்பிமார்களும், போற்ற - துதித்து நிற்க, தார்-மாலையை, வலம்புரி - வலப்புறமாகத் தரித்துக்கொண்டிருக்கும், அவன் - துரியோதனன், பொலம் தவிசில் - பொன்னாலாகிய ஆசனத்தில், இருந்தனன் - வீற்றிருந்தான்.

குறிப்பு:—இந்தச் செய்யுளில் 'வலம்புரி' என்பது நான்குமுறை சிறிது வெவ்வேறு பொருள்களில் வந்திருப்பதால் சொல்பின்வருநிலை அணி. முதல்வலம்புரி திருமால் கையிலுள்ள வலம்புரிச்சங்கைக் குறிக்கும்; இரண்டாவது, வலம்புரிகின்ற அதாவது பிரதக்ஷணம் செய்கின்ற என்ற பொருளைத் தரும்; மூன்றாவது, வல்லமையோடு செய்கின்ற என்றாகும்; நான்காவது, மாலையைப் பூணூல்போல் வலப்பக்கமாகப் போட்டுக் கொண்டிருப்பவன் என்னும் பொருளுக்குரியது.

தொல்ப கீரதி மைந்தனுந் துரோணனுஞ் சுதனும்
வில்வி தூரனுங் கிருபனு முதலிய வேந்தர்
மல்கு மூவிரு பத்துநூ றாயிர மகிபர்
செல்வநாயகற்கியோசனையிரண்டெதிர்சென்றார். 40.

பதவுரை.

தொல் - பழமையான, பகீரதி - கங்கைக்கு, மைந்தனும் - பிள்ளையாகிய பீஷ்மனும், துரோணனும் - துரோணனும், சுதனும் - அவனது பிள்ளையான அச்வத்தாமனும், வில் விதூரனும் - வில்வல்லானான விதூரனும், கிருபனும்-கிருபனும், முதலிய வேந்தர்-முதலிய அரசர்கள், மல்கு- நெருங்கிய, மூஇருபத்து நூறு ஆயிரம் மகிபர் - அறுபது லட்சம் வேந்தர்கள், செல்வ நாயகற்கு - லக்ஷ்மியின் நாயகனான கண்ணனுக்கு, இரண்டு யோசனை-இரண்டு யோசனை தூரம், எதிர் சென்றார் - எதிர்கொள்ளச் சென்றனர்.

இலக்கணம்.

இரண்டாம்வேற்றுமை விரியில் எப்பொழுதும் வல்லினம் மிகுமென்றும், தொகையில்பெரும்பாலும் மிகாவென்றும்கூறிப் பிறகு இரண்டாம்வேற்றுமைத் தொகையினு மிகுகின்ற சில இடங்கள் இவை இவையென்று காட்ட வாரம்பித்து, அத்தொகை எழுவாய்த் தொடரோடு மயங்குமானால் வல்லினம் மிக வேண்டு மென்பதையும் சென்றவாரப் பாடத்தில் செப்பினோம். இரண்டாம்வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகுகின்ற இடங்கள் பின்னுஞ் சிலஇன்று காண்போம்:—

2. இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில், நிலைமொழி வன்றொடர்க் குற்றியலுகரமாக முடியுமானால், வருமொழிமுதலில் வரும் வல்லினமெய் மிகும்.

பாக்கு + கொடுத்தான் = பாக்குக் கொடுத்தான்
உப்பு + தின்றான் = உப்புத் தின்றான்

முத்து + சேர்த்தான் = முத்துச் சேர்த்தான்.
கச்சு + பூண்டாள் = கச்சுப் பூண்டாள்.
பூட்டு + திறந்தான் = பூட்டுத் திறந்தான்.
காற்று + பிடித்தான் = காற்றுப் பிடித்தான்.

குறிப்பு:—வன்றொடரல்லாத மற்றத்தொடர்க் குற்றியலுகரங்களுக்குப்பின் வல்லினம் பொதுவிதிக்கே இணங்கி மிகாது. (உ - ம்) ஆறு கடந்தான், எருது பிடித்தான். பந்து கொடுத்தான். அமிழ்து தின்றான். எஃகு தீட்டினான்.

3. இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில் நிலைமொழி, பூ, ஈ, ஔ, என்பனபோன்ற ஓரெழுத்தொருமொழி நெடில்களாயிருக்குமாயின் வருமொழி முதலில் வரும் வல்லினமெய் மிகும்.

பூ + பறித்தான் = பூப்பறித்தான்
ஈ + கொன்றான் = ஈக்கொன்றான்
ஔ + செய்தான் = ஔச்செய்தான் (ஔ - மதகு)
ஆ + கட்டினான் = ஆக்கட்டினான்.
தூ + தின்றான் = தூத்தின்றான் (தூ - மாமிசம்)
கோ + கண்டேன் = கோக்கண்டேன் (கோ-அரசன்)

குறிப்பு:—மை, கை, பை, என ஐகாரத்தோடு சேர்ந்து ஆகின்ற உயிர்மெய் ஓரெழுத்தொருமொழிகளுக்குப்பின் வல்லினம் மிகுவதில்லை:—(உ - ம்) கை பிடித்தான், மை தீட்டினாள், பை திறந்தான். தன்னை உணர்த்தி நிற்கும்போது தவிர ஐகாரத்திற்கு நெடிலிற்குரிய இரண்டுமாத்திரை இல்லாமையால் மற்ற நெடில்களைப்போல் அதன்பின் வல்லினம் மிகுகின்றதில்லை. (ஐ காரத்தின் மாத்திரையைப் பற்றி 6-வது வால்யூம், 129-வது பக்கத்தில் விளக்கியிருப்பதைக் காண்க) கோழை, அழகு, முதலிய பொருள்களுடைய ஐ என்னும் உயிர் ஓரெழுத்தொருமொழிக்குப் பின்னும் வலிமிகாது:-ஐ கக்கினான், ஐ செய்தான்.

4. இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரிலும், நிலைமொழி இரண்டுகுறில்களால் ஆன சொல்லாயிருப்பதுடன் உகர உயிரிலும் முடியுமானால் வருமொழிமுதலிலுள்ள வல்லினமெய் மிகும்.

கடு + தின்றான் = கடுத்தின்றான். (கடு - விஷம்)
வடு + பெற்றான் = வடுப்பெற்றான்
உடு + கண்டேன் = உடுக்கண்டேன் (உடு-விண்மீன்)
மது + பருகினான் = மதுப்பருகினான்
உரு + காட்டினான் = உருக்காட்டினான்
கொலு + கண்டான் = கொலுக்கண்டான்

குறிப்பு:—இரண்டு எழுத்துக்களுங்குறில்களாகவே இருக்கவேண்டும். அவைகளில்பின்னெழுத்து உகரம் ஏறிய உயிர்மெய்யாயும் இருக்கவேண்டும். இவ்விரண்டும் சேர்ந்தால்தான் இரண்டன்தொகையிலும் வலி மிகும். ஆகையால், முதலெழுத்து நெடிலாக இருக்குமானால், காடு கண்டேன், மாது கண்டேன், எனப் பொதுவிதியின்படி வலி மிகாமலே புணரும்.

இரண்டு குறில்களால் ஆன சொல்லானாலும் அது உகரத்தை யீற்றில் உடையதன்றாயின் வலி மிகாது. பசிதீர்த்தான், மனைகண்டான், எலிபிடித்தான், கதை சொன்னான், என மிகாமலே புணரும்.

அது இது எனச் சுட்டெழுத்தை முதலினுடைய சொற்களும், எது என்ற வினாவெழுத்தை முதலினுடைய சொல்லும், இரண்டு குறில்களால் ஆகி உகரத்தில் முடிகின்ற சொற்களா யிருந்தபோதிலும் அவைகளை நிலைமொழிகளாகவுடைய இரண்டன் தொகையில் வருமொழிமுதல் வல்லினம் மிகாது:— அது கண்டேன், இது சொன்னேன், எது கொடுத்தான்—என இயல்பாகும்.

5. முதலெழுத்துக் குறிலாகவும் பின்னெழுத்து நெடிலாகவும் அமைந்த இரண்டு எழுத்துக்களால் ஆன சொல்லை நிலைமொழியாகவுடைய இரண்டாம் வேற்றுமைத்தொகைநிலைத்தொடர்களில், வருமொழி முதலில் வரும் வல்லினமெய் மிகும்.

விழா + செய்தான் = விழாச் செய்தான்.
நறா + குடித்தான் = நறாக் குடித்தான்
நிலா + கண்டேன் = நிலாக் கண்டேன்
விளா + பறித்தான் = விளாப்பறித்தான்

6. நிலைமொழி இரண்டுநெடில்களாலான சொல்லாயிருக்குமாயின் இரண்டன்தொகையிலும் வருமொழி முதல் வலி மிகும்.

ஆமா + பிடித்தான் = ஆமாப்பிடித்தான்
தாரா + கண்டான் = தாராக்கண்டான்
ஆடூஉ + கண்டேன் = ஆடூஉக்கண்டேன்.
(ஆமா - காட்டுப்பசு) (தாரா-நாரை) (ஆடூஉ-ஆண்)

குறிப்பு:—ஆடூஉ, என்பதில் மூன்றெழுத்துக்கள் இருப்பதுபோல் தோன்றினாலும் ஈற்றிலுள்ள உ, அதற்குமுன் உள்ள ஊகாரம் அளபெடுத்திருக்கின்றதென்பதைக்காட்ட எழுதப்பட்டிருக்கின்றதேயன்றி அதற்கு ஒலிவடிவு இல்லை. (இவ்விஷயம்விளக்கப்பெற்றிருப்பதை 6வதுவால்யூம் 104-ம் பக்கத்திற்காண்க) ஆகையால் ஆடூஉ என்பதை இரண்டு நெடில்களால் அமைந்த சொல் என்றே கொள்ளவேண்டும். இந்தச் சொல்லிலும் மகடூஉ (பெண்) என்னுஞ் சொல்லிலும் ஈற்று ஊகாரம் எப்பொழுதும் அளபெடுத்தே வழங்கி வருவதால் இவைகளை இயற்கை அளபெடைச் சொற்கள் என்று கூறுவார்.

7. நிலைமொழி, ஊகாரத்தை ஈற்றினுடைய சொல்லாயின், இரண்டன்தொகையிலும் வருமொழிமுதல் வல்லினம் மிகும்.

கொண்மூ + கண்டேன் = கொண்மூக்கண்டேன்
மகடூஉ + கண்டேன் = மகடூஉக்கண்டேன்.
(கொண்மூ - மேகம்) (மகடூஉ - பெண்)

III உயிர் அல்லது யகர ரகர ழகர மெய்களை ஈற்றினுடைய நிலைமொழியும் வல்லினமெய்யை முதலினுடைய வருமொழியும் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தோக்க தொகையாய்த் தொடருமாயின் அவை, வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தே புணரும். அவ்வாறு மிகாமல் புணர்கின்ற இடமே இல்லை.

யானை + தறி = யானைத்தறி (யானையைக் கட்டுந் தறி)
எலி + பொறி = எலிப்பொறி (எலியைப் பிடிக்கும் பொறி)
தார் + தோள் = தார்த்தோள் (தாரை அணிந்ததோள்)
மிளகு + கடை = மிளகுக்கடை (மிளகை விற்கும் கடை)
கூழ் + பானை = கூழ்ப்பானை (கூழை வைக்கும் பானை)
நாய் + பாஷாணம் = நாய்ப்பாஷாணம் (நாயைக்கொல்லும்பாஷாணம்)
பந்து + களம் = பந்துக்களம் (பந்தை ஆடுகின்றகளம்)

குறிப்பு::—இரண்டாம்வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகையாயிருக்குமானால், வேறொன்

றும் பாராமலே வல்லினமெய் மிகவேண்டுமென்று நிச்சயமாய்க் கொண்டுவிடலாம்.

ஆகையால், சுருங்கச் சொல்லின், இரண்டாம்வேற்றுமைக் குரிய விதிகள் இவை:—

1 இரண்டன்விரியினும், உருபும் பயனும் உடன்தொக்க தொகையினும், வல்லினம் மிகுந்தே தீரும்.

2. இரண்டாம்வேற்றுமைத் தொகையில்—எழுவாய்த் தொடரோடு மயங்கும் போதும், நிலைமொழி தனிநெடில் இணைக்குறில் குறில்நெடில் அல்லது இணை நெடில்களால் அமைந்திருக்கும்போதும், வன்றொடர்க் குற்றியலுகரத்திலும் ஊகாரத்திலும் முடியும்போதுந் தவிர மற்றவிடங்களில் — வல்லினம் மிகாது.

இவ்விதிகள் மறக்காதிருக்குமாயின் எழுதுங்கால் நேர்கின்றபிழைகளிலொருபகுதியை விலக்கியதாகும்.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—3. நட்புப் படலம்

[201-வது பக்கத் தொடர்ச்சி]

தோற்ற மானுட மீண்டும் வென்றது.

மாருதி கூறிய வனைத்தையும் குரக்கினத் தலைவன் மகிழ்ந்து கேட்டனன். கேட்டு

அன்னவா முரையெலா மறிவினு லுணர்குவான்
உன்னையே யுடையவெற் கரியதெப் பொருளரோ
பொன்னையே பொருவுவாய் போதெனப் போதுவான்
தன்னையே யனையவன் சரணம்வந் தணுகினான்.

[அனுமனது அத்தகையவான வார்த்தைகளை எல்லாம் தன்னுடைய அறிவினால் ஆராய்ந்து உண்மையை உணர்ந்துகொண்டவனாகி, "உன்னையே துணைவனாக உடைய எனக்கு எதுதான் வாய்ப்பது அரியதாகும்; பொன்னைப் போன்ற மேனியையுடையவனே, வருவாயாக, என்று சொல்லிப் புறப்பட்டுத் தன்னையே அனையவனாகிய இராமனது பாதங்களை வந்து சேர்ந்தான்]

சுக்கிரீவனும் இராமனும்இப்பொழுது தபுதாரநிலையினராந் தன்மையில் ஒத்திருத்தலால் சுக்கிரீவன் தன் நிலையிலே இருந்த இராமனது சரணம்வந் தணுகினான் எனப் பொருள்கொள்ளலுந் தகும். மற்று, தன்னையே யனையவன் என இராமபிரானைக் குறிப்பதிலும் ஓர் சுவையுளது. 'தன்னொப்பாரில்லப்பன்' என்றும், "தனக்குவமை இல்லாதான்" என்றும் பரமனைப் பாராட்டுவார் பெரியோர். "அற்றன்று, அற்றன்று, அவனுக்கு ஒப்பும் உவமையும் உள" என அப்பெரியோர் உரையினை மறுக்கப்புக்கனர்போல்கம்பர், 'தன்னையே அனையவன்' என உடன்பாட்டுவாசகத்தில் மீண்டும் அப்பொருளே விளையும்படி விந்தையுறச் சமர்த்தித்துக்கூறுகின்றார்போலும். தானே தனக்கு உவமையாயிருக்கின்ற ஒருவனைத் தனக்குஉவமை இல்லாதான் என்று எங்ஙனம் இயம்பலாம்!

இனி, இவ்விராமனைத்தரிசிக்கவருவான்சுக்கிரீவன். இந்தச் செவ்வியில்,

"அனுமா னிவ்வாறு சொல்லக்கேட்ட வானராதிபனாகிய சுக்கிரீவன் மனத்திற் சந்தோஷங்கொண்டு, இராமரிடத்தில் தான் கொண்டிருந்த பயத்தைத் தவிர்த்து, மனோ வியாகுலத்தைப் போக்கி, அழகிய மானிடஉருவம் தரித்து, வெகு பிரீதியுடன் இராமரை நோக்கி, "ஐய, நீர் தருமவழிநின்ற எல்லாரிடத்திலும் அன்புபாராட்டுந் தன்மையர் என்று உம்முடைய குணங்களனைத்தையும் யதார்த்தமாக மாருதி சொல்லக் கேட்டேன். பிரபுவே, வானரனான என்னோடு நீர் நட்புக்கொள்ள விரும்புவது எனக்கு மிக்க மேன்மையும் பெரிய லாபமும் ஆகின்றது. என்னுடைய சிநேகம் உமக்கு வேண்டுமாகில் இதோ யான் நீட்டிய கையை உம்முடைய கையால் பற்றிச் செய்யவேண்டிய உறுதியைச் செய்துகொள்ளும்" எனச் சாற்றினான் என்பர் வான்மீகிமுனிவர். வேண்டாத வேடங்களைப்பூண்டுபூண்டுபுகுதலே எற்றுக்கோ அவ்வடநூற் கதைவரு பாத்திரங்களுக்குக் கடனாகின்றது. தம்முடைய வானரத்தன்மையை மாருதிஇராமனிடத்தில் வெளிப்படுத்தி யிருக்கின்றானோ இல்லையோ என்பது தன்பால் சொல்லியவைகளினின்று தெரியவில்லை யாதலின், தன்னைச் சரணமடையப் போந்துள அவ் வரசகுமாரர்களுக்கு ஓர் குரங்கின் காலை நீட்டுவதனினும் மானுடக்கால் கொண்டு காட்டுவதே சிறப்புடைத்தென்று இச்சுக்கிரீவன் எண்ணியிருக்கலாம் என்றாலோ-இத்துணை விரைவில் தன் கருத்தையும் வேடத்தையும் மறந்து தன்னை வானரன் என்றே அறிமுகம் செய்துவைத்துக்கொள்வது வியப்பை விளைவிக்கின்றதே. மற்று, ஏனைய பாத்திரங்கள் வேடம்பூண்டு புகுந்தவிடத்து நடித்த வரலாற்றின் வரிசையிலேயே இதுவும் நிற்கின்றதாதலின் விளைந்த இவ் வியப்பு மிகவிரைவில் மாறிவிடவும் வேண்டும். ஒன்று நிச்சயம்; மணிமேகலை என்னும் நூலில், ஆபுத்திரன் புரிந்த அரும்பெரும் தானங்களின் உறுபயனை அளிப்பதற்கு ஓர் அந்தண முதியோனாக வேடம் பூண்டு வந்த இந்திரன், "இந்திரன் வந்தேன் யாது நின் கருத்து" என்று தன் பெயரையே பேசக்கேட்ட அவ் வாபுத்திரன் வெள்ளைமகன்போல் விலாவிறச் சிரித்தான் என்பர் சீத்தலைச் சாத்தனார். மற்று, மானுடனாகிவந்த சுக்கிரீவன் வந்தவுடனே தன்னை வானரனாக உரைப்பதைக்கேட்டு அயல்நின்ற அனுமனோ அதனிற் சிரிப்பதற்கொன்றுங் கண்டிருக்கமாட்டான். ஏனெனில், சற்றுமுன், மாணியின் படிவங்கொண்டு இராமனை நண்ணிய இந்தச் சொல்லின் செல்வனும், 'நான் சுக்கிரீவனுடைய மந்திரி, ஜாதியில் வானரன், வாயுகுமாரன். நினைத்த உருவம் எடுக்கவல்லேன் ஆதல்பற்றிப் பிரமசரிய வேடம் தரித்து இங்கு வந்தேன்" என்ற தன் வேடத்திற்கொரு விலை வைக்காமலே வெண்மையேமிகப் பகர நேர்ந்தனன். ஆதலின் அந்த ராஜாவின் வேடவிளம்பரம் இந்த மந்திரிக்கு அதிசயமாயிருக்கக் காரணம் இல்லை. வான்மீகத்தில், இராமன்பால் மோகங்கொண்ட சூர்ப்பணகை, சரிந்த வயிறும் கோரப்பற்களையும் உடைய அரக்கியாகவே போந்தனள். அவ்வாறின்றிக் கம்பர்தம் நூலிற் போல், வனப்புடை வடிவங்கொண்டு காமவல்லியாகி வந்திருப்பாளாயினும், அவ் வடநூன்முறைக் கிணங்க, "என் பெயர் சூர்ப்பணகை; நான் ஓர் அரக்கி; சரிந்த வயிறும், கோரப்பற்களும், குருதிக் கண்களும், செம்பட்டை மயிரும், உயிர்களைக் கொன்றுதின்

ணும் வாழ்க்கையும் உடையவள்; நினைத்த உருவம் எடுக்கவல்லேன். ஆதல்பற்றி, கண்கவர் வனப்புடை இவ்வடிவங்கொண்டு ஓர் மெல்லியல் மாதராய் உன்னைக் காதல்கூர வந்திருக்கின்றேன்" என்றே, இவ்வனுமனையும் அவன் தலைவனையும்போல், பகர்ந்திருப்பாள் என்பதற் கையமில்லை. சீதையை வஞ்சிப்பான் வேண்டிச் சன்னியாசி வேடம் மிகமுயன்று பூண்டுசென்ற அவள் முன்னோன், "சீதாய், நான் இராவணன், அரக்கர் மன்னவன்" என்னவே தன் சரிதத்தைத் துவக்கலாயினன். விலங்குகள் மானுடமொழியிற் பயின்று இராமையே குறை; இருக்குமாயின், மாயமானாகிய அம்மாரீசனும் இராமலக்மணர்களுக்குமுன் எய்தியவுடன், "ஏ, ராகவா, நான் மாரீசன், அரக்கன், இராவணனுக்கு மாதுலன், நினைத்த உருவம் எடுக்கவல்லேன். ஆதல்பற்றி அழகியவோர் மானின் வடிவங்கொண்டு உங்களை வஞ்சிக்க வந்திருக்கின்றேன்" என்னவே விளம்பியிருப்பானோ என்னுமோர் ஐயம் விளைகின்றது. கோதமன் வடிவங்கொண்டு அகலிகைக்கு எதிரே வந்தான் இந்திரன். வான்மீகத்தினுள் வேடம் பூண்டு வந்தவர்களில் அவன் ஒருவன்தான், ஆபுத்திரன்முன் தான் துவக்கிய முறையையும் மறந்து, "அகலிகை, இந்திரன் வந்தேன், யாது நின் கருத்து" என்று தன்வேடத்தைத் தானே வீணாக்காமலிருக்க நினைத்தனன். ஆயினும் என்! அவனைக் கண்ட அக்கணமே "கெட்டபுத்தி யுடையவளாகிய அகலிகை இந்திரன் தன்னை விழைந்து வந்துளன் என்னும் குதூகலம் அடைந்து, 'தேவராஜனே, என் எண்ணம் நிறைவேறிக் கிருதார்த்தையாயினேன்' என்றனள். எனின், அவ்விடத்தும் இந்திரன் பூண்டவேடம் வீணேயாயிற்று. வஞ்சிக்கவந்தவர் தாமே விளம்பாவிட்டாலும், வஞ்சிக்கப்படுவதற்குநிற்பவர் அவர் விளம்பிவிட்டதாகவே பாவித்து விவகரிப்பவர் ஆயினர். ஆதலின் வடநூல் முறை முற்றிலும் பிறழ்ந்ததென்று இதனிலும் எண்ணற்கிடமில்லை. வேடத்தைவிட்டு அவன் விளம்பவில்லையெனில், வேடத்தைவிட்டு இவள் அழைக்கின்றாள். வேறென்; வேடம் வீணாம்வகை இங்கு இவ்வாற்றால் நிறைவேறியது.

வான்மீகர்கதையில் இவ்வண்ணம் சிலர் வேண்டா வேடம்பூண்டு வந்துநிற்பதற்கு மாறாகக் கம்பர் நாடகத்தில் பாத்திரங்கள்பூண்ட வேடங்களுக்கெல்லாம், அவ்வவற்றிற்குரிய இரகசியம் வேண்டளவு காக்கப் பெறுவதுடன், பொருளும் பயனும் அமைந்திருக்கக் காணலாம். வடிவமும் பெயரும் வேறாக மாறிவந்த அவ்வஞ்சமகள் சூர்ப்பணகை ஒருத்தி தன்பிறப்பை மறைக்காமல் இராமனுக்கு உணர்த்தியதும் நாடகச் சிறப்பை மறுப்பதாகாது. அதுவுந் தக்கதேயாயிற்று. இராமனது மனத்தைக் கவர அழகிய உருவம் வேண்டியிருந்தது; ஆதலின் அதனை ஏற்றுக்கொண்டாள். மூன்றுலகையும் ஆளும் இராவணேசுவரனது தங்கையே தான் என்றால் அவ்விராமனது மதிப்பையுங் கவர்ந்து தன் கருத்தை ஐயமற முடித்துக்கொள்ளலாம் எனமதித்தனள். இம்முறைக்கிணங்கியே அவள் உரைகளும் செயல்களும் நிகழலாயின. இப்படித் தம் பாத்திரங்களை இயற்கையுற நடத்துவார் கம்பர். இதனால், வான்மீகர் நூலிற்குங் கம்பர் நூலிற்கும் ஏற்றந் தாழ்வு காணமுயலல் நேரன்று. அதன் முறைவேறு, இதன் முறைவேறு. அவ்வவ் முறைக்கு அடுத்ததை அவரவர் அமைதியுற இயற்றினர். கதைக்குக் கால் இல்லை என்பது பழையதோர் வழக்கு; அதனை நிச்சயப்படுத்துகின்றார் வான்மீகிமுனிவர். நாடகம் நடப்பதற்குக் கால்கள் வேண்டும், கம்பர் இதனைமறந்திலர்.

ஆதலின், சுக்கிரீவன், கம்பர் நூலில் நிகழ்கின்ற இந்நாடகத்திற்கு வேண்டாதவோர் மானுடவடிவம் பூண்டிலனாகி, தன்னையே யனையவன் சரணம் வந்து அணுகி,

கண்டன னென்பமன்னோ கதிரவன் சிறுவன் காமர்க்
குண்டலந் துறந்தகோல வதனமுங் குளிர்க்குங்கண்ணும்
புண்டரிகங்கள்பூத்துப்புயறழீஇப்பொலிந்ததிங்கள்
மண்டலமுதயஞ்செய்தமரகதக்கிரியனானை.

[சூரியன்புதல்வனான சுக்கிரீவன், தாமரைகள் மலர்ந்து மேகங்கள்தழுவி விளங்குகின்ற சந்திரமண்டலம் உதிக்கப் பெற்ற மரகதமலை போன்றவனாகிய இராமபிரானது, அழகியகுண்டலங்கள் இல்லாத அழகியமுகத்தையும் குளிர்ந்த கண்களையும் பார்த்தான்.]

ஆயினும், இராமனது இவ்வுருவம் சுக்கிரீவனுக்கு மிகவிரைவில் ஓர் உருவகமேயாகமாறித் திகழ்கின்றது. அவ்வாறு திகழ்வதை,

நோக்கினனெடிதுநின்றானெடிவருங்கமலத்தண்ண
லாக்கியவுலகமெல்லாமன்றுதொட்டின்றுகாறும்
பாக்கியம்புரிந்தவெல்லாங்குவிந்திருபடிவமாகி[பான்.
மேக்குயர்தடந்தோள்பெற்றுவீரராய்விளைந்தவென்

[இராமபிரானைப் பார்த்தவண்ணமாய் நெடிதுநேரம் நின்றான். நின்று, சொல்வதற்கரிய தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரம்மன் படைத்த உலகத்திலுள்ள ஜீவராசிகள் அனைத்தும், அப் படைப்புக்காலந்தொடங்கி இன்றுவரையிலும் செய்திருக்கின்ற பாக்கியங்களெல்லாம் திரண்டு இரண்டு உருவம் ஆகி, மேல்நோக்கிவளர்ந்த தோள்களைப் பெற்று, இவ்வீரர்களாய் விளைந்தன என்று எண்ணுவானாயினன்.]

உலகெலா மொருங்குசெய்த பாக்கியமே திரண்டதோர் உருவகமாக இராம லக்ஷ்மணரை மதித்தபோழ்து சுக்ரீவனது கருத்தின்கண் இரண்டு வேறு எண்ணங்கள் உதித்தன.

தேறினனமரர்க்கெல்லாந்தேவராந்தேவரென்றே
மாறியிப்பிறப்பில்வந்தார்மானுடராகிமன்னோ
ஆறுகொள்சடிலத்தானுமயனுமென்றிவர்களாதி
வேறுளகுழுவையெல்லாமானுடம்வென்றதன்றே.

[தேவர்களுக்கெல்லாம்தேவராகிய முழுமுதற்கடவுளே தன்ரூபம்மாறி இந்தப்பிறப்பில் மனிதராகி அவதரித்தார், ஆகையால், கங்கையைச் சடையில் வைத்தவனாகிய சிவபிரானும் பிரமனும் ஆகிய இவர்களை முதலாகவுள்ள மற்ற இனத்தையெல்லாம் மனிதப்பிறப்பானது வென்று மேம்பாடு அடைந்தது என்று நிச்சயித்தான்.]

சான்றவனாகிய அனுமனது உறவும் நட்பும் அமைந்த நன்மையால் சுக்கிரீவனது உணர்வும் இவர் அமரர்க்கெல்லாந் தேவராந் தன்மையை ஊகிக்கலாயிற்று. மற்று, உலகொருங்கு செய்த பாக்கியமோ, அல்லது அமரர்க்கெல்லாம் தேவரோ, ஓர் உருவம் எடுப்பதாயின், மானுடப்படிவமே தக்கதென மதித்தமையால், தேவரனைய மற்றெல்லாப் பிறப்புக்களையும் மானிடமே வென்றதென வெண்ணிய வியப்புடன் அம்மானிடத்திற்கு முதற்பரிசு அளிக்கின்றனன். இப்படி மானுடப் பெருமையை இசைத்துரைத்த வானரப் பெருமகனுக்கு நம்மனோர் வந்தனம் உரியாதருக. கச்சிய

ப்ப சிவாசாரியார் காலம் யாதென ஆராயாமல், கம்ப ருக்குமுன்னரே கந்தபுராணம் பாடப்பெற்றதென்று கொள்ளநேருங்கால், இம் மானுடவெற்றியின் அருமை பின்னுஞ் சிறிது சிறந்து தோன்றும். அக் காப்பியத்தினுள், சிவபிரானும் உமாதேவியும் ஓர் கூவிளை மரத்தின்கீழ் இனிது அமர்ந்திருந்தபோது அம்மரத்தின்மீதிருந்த ஓர் குரங்கு தன் குறும்புமதிக் கிணங்க இலைகளைப் பறித்துப்பறித்து அவர்மேல் தூவுவது கண்ட சுந்தரி சினந்துநோக்குதலும் அவ்வானரம்நடுநடுங்கி, ஐயனையும் ஆய்தனையும் ஆர்வமொடு வணங்கித் தன் பிழை பொறுத்திடுமாறு இரந்துநிற்க,

பிழையிதென வச்சமொடு பேசலைமை யீண்டே
விழுமியதொர் கூவிளையின் மெல்லிலைக ளிட்டு
வழிபடல் புரிந்தனை மனுக்குல முதித்து
முழுதுலகை யாளுகென முன்னவன் மொழிந்தான்

[பிழை செய்தாயென்று அச்சங்கொண்டு நீ இவ்வாறு பேசவேண்டா. இப்பொழுது நீ சிறந்த வில்லுவச்செடியின் மெல்லிய இலைகளைக்கொண்டு அருச்சனைபுரிந்து எம்மை வழிபட்டாய். ஆகையால், மனுகுலத்தில் பிறந்து நீ உலகம் முழுவதையும் ஆள்வாயாக, எனச் சிவபிரான் அருளினன்]

எனினும், அக் குரங்கானது இதனை அருளுடைய வரமென்று கருதாமல், நெஞ்சில் நஞ்சுடைய ஞதைவின் வரமளித்தல்போல் தனக்குத் தண்டமே விதித்தானென மதித்து, சிறுபிழை இதற்கோ மனிதனே யாகப் பிறக்கவேண்டும் என்னும் அத்துணைப் பெரிய தண்டம் விதிப்பதென மன்றுடிற்றென்ன,

நுங்களை வைகலு நோக்கி யுவப்பாய்
இங்குறை கின்ற திகந்து நிலம்போய்
மங்குறு செல்வ வலைப்படு வேனேல்
எங்கள் பிரான்பினை யெங்ஙன முய்கேன்

[உங்களை நான் நாடோறும் தரிசித்து உவகையோடு இங்கு வாழ்வதை இழந்து, உலகத்திலே மனத்தைமங்கும்படி செய்கின்ற செல்வம் என்னும் வலையில் சிக்கிக்கொள்வேனயின், எம்பெருமானே, பின்னே நான் எவ்வாறு உய்வேன்]

எனக் கருத்தழிந்து ஆருயிர் கலங்குங்காலையில், ஆறு கொள் சடிலத் தண்ணல், "உன் உள்ளந் தூயது, யாதும் வருந்தல், நிலத்திடைச் சென்று நீ சிலகால மரசிருந்து பின்னர் இங்கு மீள்வாய்" எனத் தேற்றினு மாற்றுமல், மீண்டும்,

பொய்ம்மறை யான புலானுடல் போற்றி
அம்மையில் வாழ்விடை யற்ற முருதே
யிம்முக னேடிற வெற்கரு ளென்னு
மெய்ம்முசு வின்கலை வேண்டிய தன்றே.

[பொய்மையையேமறைத்துவைத்திருக்கும் என்புலால் உடலைப்போற்றி, அவ் வுலகவாழ்வினிடையே நான் நாசமடையாதபடி இந்தக் குரங்குமுகத்தினேடேனும் நான் அங்குப் பிறக்கும்படி நீ அருள் செய்யவேண்டும்' என்று அந்த மெய்யுணர்வுடைய குரங்கானது ஈசனைவேண்டிக் கொண்டது]

என்ன அப் புலவர்பெருந்தகை நிகழ்த்தியிருக்கின்றார். "மங்குறு செல்வ வலைப்பட்டு வாழாதொழியும் மனிதமுகம் எனக்கு வேண்டா. இக் குரங்குமுஞ்சியே மிகச்சிறப்புடைத்து" என அக்குரங்குக்கள்வன் மானுடப் பரிபவத்தின் இழிவைப்பழித்தது. எனின், அங்கு ஓர் வானரத்தின்வாயினல் மானுடம்தோற்று நிற்கின்ற பரிபவத்தைக் காணலாம். அவ்வாறாக, அந்தத் தோல்வியே என்றென்றும் நிலைத்திராவண்ணம், மனிதரை உய்விக்கவந்த இந்தக் கம்பர் பெருமான், தம் நூலில் ஓர் வானரத்தைக் கொண்டே, மானுடம் வென்றதென்னும்செய்தியைச் சாதிக்கவைக்கின்றார். இல்லையேல், முசுகுந்தன் மூட்டிய பழி மானுடத்திற் கழியுமா றிலதாகிவிடும். அங்குக் குரங்கிற்குத்தோற்ற மானுடம் இங்குத் தேவரையும் வென்றபடி தோன்ற அருள்புரிந்ததும் எம்பெருமான்றன்தோற்றமேயாம். இப்படித் தன்னினத்து முசுகுந்தனை மறுத்து மானுடப்பெருமையை நிலைநாட்டிய சுக்கிரீவனுக்கு நாம் மிகவும் நன்றியுடையவராதல் வேண்டும். தன் தமையனைக் கொன்றது கருதி அவனைச் சிறிதேனும் பழிப்போமாயின் நாமும் இந்நன்றியைக் கொன்றவர்களாவோம்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[203-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பத்து, 6-ம் தசகம்
1-ம் பாசுரம்.

துவளில் மாமணி மாட மோங்கு
தொலைவில்லி மங்க லந்தொழு
மிவளை நீரினி யன்னை மீருமக்
காசை யில்லை விடுமினே
தவள வொண்சங்கு சக்கர மென்றுந்
தாமரைத் தடங்க ணென்றுங்
குவளை யொண்மலர் கண்க ணீர்மல்க
நின்று நின்று குமுறுமே.

அவதாரிகை:-ஆழ்வார், திருவிண்ணகர் தடக்கமாயுள்ள எம்பெருமானுடைய, திவ்விய க்ஷேத்திரங்களிலும் அவற்றின் திவ்வய ஸௌந்தரியத்திலும், அவதாரங்களின் மாயங்களான பல சேஷ்டைகளிலும் ஈடுபட்டு அநுபவித்து ஒருவாறு மனந்தேறினு ரானுலும் அவனுடன்கூடிக் கலவிசெய்யவில்லையே என்ற குறை ஆழ்வாரை வருத்த அவர் இன்னதாகி எப்பொழுதும் அவனையே சிந்தைசெய்யும் பக்தியோக (Last stage) பரமகாஷ்டையை இப்பத்துப்பாசுரங்களால், "சேதஸா, ஸர்வகர்மாணி, மயிஸன்னியஸ்ய, மத்பர, புத்தியோகம், உபாஸ்ருத்திய, மச்சித்தம், ஸத்தம் பவ" — என்று கிருஷ்ணபகவான் கீதா சாஸ்திரத்தில் 18வது அத்தியாயம்57 சுலோகத்தில்கற்பித்துப்பணித்தபடி நம் ஆழ்வார் இப்பொழுது தம்சொந்த சித்தவிருத்தியில் அனுஷ்டித்து அதில்கடைபெறுவதைஉதாகரித்துக் காட்டுகிறார். திருத்துலைவில்லிமங்கலத் தெம்பெருமானுடனே அத்தியந்தமான கலவைசெய்து பரிமாற்றப் பேறு பெற்றபின் அதை இழந்து அவனையே ஸதாஸர்வகாலம் தன் சித்தத்தில் வைத்தவளாய்ப் பிச்சேறிய ஒருபிராட்டியை (ஐந்தாவதுபாசுரம் கூறுகின்றவண்ணம்) மீட்டிக்கொடுக்கும்படி அன்னைமார் அவள் தோழியை வேண்ட, அத்தோழியின் பாசுரங்களாகஇந்தப் பத்துப் பாடியிருக்கின்றார். இப்பத்தில் முதல்பாசுரம் முதல் இறுதிப்பாசுரம் வரையிலும் தோழி, இப்பிராட்டியைத்தான் மீட்டிக்கொடுக்கமுடியாதவளென்றும் எம்பெருமானிடத்தில் அப்பிராட்

டிக்கு ஈடுபாடு மிதமிஞ்சி யேறியிருப்பதையும் அதனை ஒருவராலும் நிவர்த்திக்கமுடியாதென்றும் இயம்புகிறாள். முதல்முதல்இப்பிராட்டியைத் திருத்துலைவில்லி மங்கலத்திற் கழைத்துவந்து அவ்விடத்தில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் திவ்விய ஸௌந்தரியத்தையும் மற்றும் அத்தலத்திலுள்ள ஏனைய ஸம்பிரமங்களையும் அன்னைமார் காண்பித்ததே அனர்த்தமாயிற்றென்றும்ஒவ்வொருபாசுரத்திலும்தோழிபல்லவிபோல் படிப்பது அறியத்தக்கது.

"உமக்காசையில்லைஇவளைவிடுமினோ" என்பதேஅப்பல்லவியாம். மேலும் ஒவ்வொரு பாசுரத்திலும் "திருத்துலைவில்லிமங்கலம்" வெகுரமணியமான ஸ்தலமென்றும், தவமியற்றற்கமைந்தபுண்ணியபூமியென்றும், சாந்திவாய்ந்த பிராம்மணர்கள் வழிபடுவதற்கு ஏற்ற நிறைவுள்ளதென்றும்,எப்பொழுதும் திருவிழா நடந்தேறுவதால்ஸாமானியருக்கும்பகவத்தரிசனம்கிடைப்பதற்குரிய வெகு விசித்திர ஏற்பாடுகள் அமைக்கப்பட்டிருக்கும்ஒருக்ஷேத்திரமென்றும், இவ்வண்ணம் ஒவ்வொரு பாசுரத்தில் ஒவ்வொரு விதமாய்ப் புகழ்ந்து பாடியிருப்பதுவும் அறியத்தக்கது. இவ்வண்ணம் க்ஷேத்திரத்தின் மாஹாத்மியம் ஒரு பக்கமும், இப்பிராட்டிக்கு அக்ஷேத்திரத்தின்கண் உள்ள எம்பெருமானிடத்தில் விளைந்த ஒரு வேட்கையைத் தன்னால் நிவர்த்திக்க வொண்ணாதென்று மற்றொரு பக்கமும் பேசுவதின் நோக்க மென்னவென்று நாம் அறிந்தாலொழிய இத் தசகத்திலுள்ள பாசுரங்களின் நயமும் பயனும் புலப்படுவ தரிது. ஸாதாரணமாய் நாட்டில் யாதானுமொரு பெண் அண்டையயல் பெண்கள்போலில்லாமல் நடத்தை பாவனைகளில் வேறுபடுவதைக் கண்டால் அப்பெண்ணுக்கு அண்மிய நற்றாய் முதலியவர்கள் உலகஅனுபவத்தில்சிறந்தவர்களையும் வைத்திய நிபுணர்களையும் கேட்டறிந்து அப் பெண்ணின் சித்தத்தில் ஏற்பட்ட கலக்கத்தைத் தெளிவிக்க எத்தனிப்பது வழக்கம். இதற்கு, முக்கியமாய் வாசஸ்தானத்தை மாற்றுவதும், யாத்திரைகள்போவதும் திருவிழாக்களுக்குப்போவதும் ஸாதுஜனஸேவை செய்வதும்இதுபோன்ற பிற பிரயத்தனங்களையும் அனுஷ்டிப்பார்கள். மேனாட்டாரே இத்தகைய உபாயங்களை அறிந்திருந்தார்களென்றுந் தற்காலம் நம்நாட்டில் இப்பொழுது இந்த முறைகள் வழங்கிவருவது அவர்களுடன் ஏற்பட்ட பழக்கத்தாலே யென்றும், முன்னிருந்த நம்மவர்கள் கேவலம் மௌட்டிக ஜனங்களென்றும் நினைப்பதுவழக்கம். இக் கலாநிலயப் பத்திரிகை படிப்பவர்களுக்கு, இது முற்றிலும்தவறுஎன்றும், நம்மவர்கள் பழகிக் கையாடாத முறைகளைப் புதிதாய் மேனாட்டார் கண்டுபிடித்திருக்கிறார்களென்பது வீண் பிரமை என்றும் இவ்வெண்ணம் அவிவேகத்தாலும் புது இயக்கங்களிலும் கொள்கையிலும் ஆதாவு மிகுதியைப்பற்றியும் வருவதென்றும் நாம் எடுத்துக்காட்டவேண்டிய அவசியமில்லை. இந்தமுதல் பாசுரத்தில் "துவளில் ஒங்கும்மணிமாடங்கள்" வில்லிமங்கலத்தில் இருப்பதுபற்றி, கிலேசப்பட்ட இப்பிராட்டி அவற்றைக் கண்ணுறுவதாலே சற்றுப் புத்தி தெளிவாளென்று அவளது தாய்மாரும் அன்பருமாகிய நீங்கள் கொண்டுவந்தீர்கள். ஆனால் இவள் ஏற்கனவே கண்ணபிரான்திறத்து மோகம் கொண்டிருந்தமையால் துலைவில்லிமங்கலம்சேர்ந்ததும்அங்கு,திவ்விய ஸௌந்தரியத்துடனும், திருமேனியில் அணிந்திருக்கின்ற திவ்யாபரண சோபையுடனேயுந் திகழ்கின்ற எம்பெருமானின் திருவாழி திருச்சங்குஇவைகளின் தேர்ச்சியுங் கண்டு அவைகளைப்பற்றியும் தாமரைப்பூப்போன்ற அவனது திவ்வியலோசனங்களையும் சொல்லியலற்றி அத்தாமரைகளின் கீழ் வளரா நின்ற குவளைப்பூப் போலுள்ள அழகிய கண்கள் நீர் மல்க நின்றுநின்று வாய்விட்டுச் சொல்லாமல் குழறா நிற்கும். இனி இவளை யாசைப்பட வேண்டா, விடுமினோ" என்கிறாள்.

மேற் குறிப்பிட்ட கீதாசுலோகத்தின் தாத்பரியம்- புத்தி - ஆத்ம ஸ்வரூப விவேகம். அதை உணர்வாயாயின் பகவானாகிய நானே உன்னை எல்லாக் கர்மங்களிலும் ஏவுகிறேனென்றும் நீ எனக்கு எவ்விதத்திலும் ஆளாயிருப்பவனென்றும் புத்திஉண்டாகும்யோகத்தைச் சுத்தமான மனதால் நன்றாகத்தெளிந்து தீர்ந்து, உபாஸ்ருத்திய-கைப்பற்றி அதாவது அடைந்து, சேதஸா - உன் மனதினால், ஸர்வ கர்மாணி - நீ செய்யும் எல்லாக் கர்மங்களையும், மயி - என்னிடத்தில், ஸந்நியஸிய - ஸமர்ப்பித்துவிட்டு, மத்பர: - என்னையே பிரயோஜநம் உடையவனாய்த் தீர்மானித்து, காரியங்களை என் பிரீதிக்காகச்செய்து, சத்தம்-எப்பொழுதும், மத்சித்த: - என்னிடத்திலேயே செலுத்தப்பட்ட மனசு உடையவனாக, பவ - நீ இரு, இதுதான் பரம புருஷார்த்தம் என்று இந்தச்சுலோகத்தால் பகவான் நியமிக்கிறார். பக்தியோகம் முடிவேறும் சமயத்திலுள்ள மனோ நிச்சயத்தை ஆழ்வார் தம்மனுபவத்தால் விளக்கிக் காட்டுகிறாரென்று முன்னரே குறித்துள்ளோம். பூர்விகர்கள் "இத்தால் ஆச்ரிதரை எம்பெருமான் தன் விஷயத்தில் படும் ஈடுபாட்டாலே ஸொந்த பந்துக்களைக்கூட விடும்படி பண்ணிவிடுவானென்று இப்பத்தின் உள்கருத்து" என்று வரைந்திருப்பது அறியத்தக்கது.

சூளாமணி

[207-வது பக்கத் தொடர்ச்சி]

அன்புலகிலே படை என்பதில்லையோ? படைகளும் பழைய வழக்கத்தின்படி அவ்வாட்சியில் அமைந்தே விளங்குகின்றன. கொதிக்கக் கொதிக்கக் கொல்லனால் கூரான முனையோடும் செய்யப்பட்டுப் புதியனபுதியனவாக வரும் இவ் வம்புகளைப் பிறர்மேல் ஏவுவதற்கு இடம் இருக்கின்றதில்லை. நல்வழியிலேயே எவரும் நிற்கின்றனர் அன்றோ? அப்படைகளுக்கஞ்சித் தனக்கினியவே நச்சிப் பேசி உற்றாரும் உழையரும் திரிய வேண்டும் என எண்ணக்கூடிய இயல்புள்ள மனதே அவனிடத்திருந்ததில்லை. இவனுடையஉள்ளம்வேறு வழியில் அமைந்துவிளங்குகின்றது. அப்பகழியினைப் பிறர்க்கென்பதின்றித் தனக்கென்றே கொண்டவன். நெறிபிறழின் மாள்வதேநெறியெனக் கொண்டவனாதலின் அந்நிலைக் குதவவே பகழியைத்தன்கையிலேந்துகின்றான். பகைவர் நண்பர் நொதுமலர் என்ற மூவகையினரில், பகைவரோ இல்லையாயினர்; நொதுமல

ர்க்கும், தம் மனத்தெழுந்தவற்றை அரசனுக்கு அஞ்சாது கூறுதலொன்றே அவனுடைய அரசவையில் இயல்வதாகிறது. ஆனபின் நட்பினராய் உடனின்று உழையரானவரோ தம் நெஞ்சகத்தே எழுந்தவற்றை மறையாது சொல்லிப்போகின்றனர்.

அரசனை யிடித்துக் கூறவேண்டினும் அவ்வாறே கூறுவரேயன்றி, அவற்றை மறைத்து அரசன் விரும்பியபடி எல்லாம் அவன் காதுக்கினியதையோ சொல்லப் போகின்றனர்? அவ்வாறு அவர்கள் தனக்கினியவே கூறவேண்டும் என்று அவன் எண்ணாதபோது நல்வழி நிற்பவர் நன்னெறிவிட்டுப் பிறழ்வதேது? அவனுடைய அமைச்சர் படைகள் முதலியன அவனுடைய அரசியலில் பொருத்தமுற்று விளங்கிய நிலை அவ்வாறாகும். 'அது' என்ற ஒரு சொல்லில் அனைத்தையும் உய்த்துணர்ந்துகொள்ளுமாறு விடுகிறார் தோலாமொழித்தேவர்.

அத்தகைய ஒரு அரசனின் மனைவியர் எத்தகையர்? தாம் பிறந்த செல்வமொளிரும் கொற்றக்குடியையும், புகுந்த குடியையும் பெருமைபடுத்த என்றே உலகில் தோன்றியவர்கள். வீங்கிப் பெருத்திருக்கின்றனவேனு மேலும்பெருக்கும் எனத்தோன்றி, இளமையோடுவிளங்கும் முலைகளையும் நுண்ணிய இடையினையும் கண்டோர், "இவ்விடை ஒடிந்தேபோயது" என்று தேற்றத்தால் கூறி இரங்கும்படியாக முலையா லழகிய அம்மனைவியர், முலை முற்றப் பெறாராயினும் கல்வியறிவு முற்றப்பெற்றவரே யாம். பஞ்சுபடினும் வருந்தும் அத்துணை மெல்லிய அடியினர். பரந்த அல்குலார். செந்நிறத் தேமல்படர்ந்த தம் இளமுலையினால் இடையை ஒடித்து இல்லையாக்கினார். இலை தழைத்த அழகிய வஞ்சிக்கொடிகள், தம்முடைய ஒளிவடிவான பூங்கொத்துச் சுமையைத் தாளாமே வளைதல் போல, இப்பெண்களும் தம்முறுப்பினையும் தாங்கமாட்டாராய் ஒடிந்து வீழ்வார்போல ஒசிந்து ஒசிந்து நடக்கும் அத்துணை மென்மையுடையார்.

காமமேபூக்களாய் வடிவுகொண்டு, அவை மலர்ந்து நின்றவைபோன்றவர். களவியல்வழியே தம் காதலனோடு இன்பந் துய்த்தவர் என்றபடி. கற்பென்பது சுடர்மணியாகி நிலவு வீசுதலேபோல விளங்குகின்றவர். களவுவெளிப்பட்டபின்கற்பொழுக்கமாய்முடிந்தபடியைச் சுட்டுகின்றது ஈது. ஒளிநிறைந்தபூங்கொத்துக்கள் இவர்களுடைய கூந்தலிற் பட்டதும் அம்மென்மையாலும் குளிர்த்தியாலும் உள்மகிழ்ந்துமலர்கின்றன; இவைஇவ்வாறுவிரிதலின் அவர்களுடைய கூந்தல்கள் அவிழ்ந்துதோளின்மீதும் பிடரிமீதும்தாழ்ந்து தரைவரையும் வீழ்கின்றன. அக்கூந்தலுக்கிடையேஒளிரும் பூணிறைந்த தோள்களோ,புகைக்குள்ளே சுடரொளி துளும்புவது போன்று விளங்குகின்றன. இத்தகைய அழகு நிலையிலே, திடீர் எனக் கூந்தல் அவிழ்தலினாலே மயங்கி வெருண்டு இமைத்து, மறவர் கைவாள் என அங்கும் இங்கும் பிறழ்ந்து, எதிரே வந்த கணவனைக் காமத்திலாழ்த்தலின் அவனுள்ளத்தைப் புண்படுத்தும் வாளாகி, அவனைக் கூடி மகிழ எதிரே வரவேற்றலின் உள்ளொளிகொடுக்கும் ஒளியுமாகிச் செருக்கிநின்றன அவர் கண்கள்.

மற்றைய நூல்களிலோ அரசர்களுக்கு அவரவர்க்கு எண்ணிக்கையின் மிக்க மனைவியர் ஆயிரர். இப்பயாபதியினுடைய மனைவியராய இவர்களோ இருவரேஆய்விளங்குகின்றனர்.மிகப்பெரிய வானுலகின்நின்றும் இறங்கியவர் என்றும் செந்தாமரையிலிருக்கும் கடவுட் பெருமாட்டியை ஒப்பவர் என்றும் கூறினும் கூட அவர்களுக்கு இழிவேயாம். ஒப்புப்பொருள்களினும் உயர்ந்து விளங்குதலினாலே, உரை கடந்து நிற்கின்றனர். "ஆயினார்" என ஆக்கச்சொற் புணர்த்தலின், இயற்கையில் ஒருவர்என நின்றவர், இவனுக்கு இன்பமூட்ட இரு வடிவோடும் இருவராக மாறி நிற்கின்றார் என்பதாயிற்று. ஒருமை நாட்டத்தோடு ஆக்கச்சொற் புணர்த்த புலவர் அவனுக்குஆயிரவரை மனைவியாக்குவரோ? ஸ்ரீபுராணமும் "இஹஸுரம்ய விஷய பௌதநபுரத்துப் பாஹுபலி ஸந்தாநத்து வந்த ராஜா ப்ரஜாபதி மஹாராஜன்; தேவிமார் ஜயவதியும் ம்ருகாவதி என இருவர்" எனக் கூறுகின்றதேயன்றி ஆயிரவர் எனக் கூறாமை காண்க (இஹ= இப்பால்; ஸுரம்ய விஷயம்=சுரமை நாடு; பௌதநபுரம்=போதன நகரம்; ப்ரஜாபதி=பயாபதி; ம்ருகாவதி=மிகாபதி; ஜயவதி=சசி.)

இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

[204-வது பக்கத் தொடர்ச்சி]

[காதேரின் வருகிறாள். இவள் ஹார்ட்காஸலுக்கும் டோரதிக்கும் பிறந்த பெண்.]

ஹார்ட்காஸல்:—பேதைப்பெண்ணே, என்ன, காதெரின்,வழக்கம்போல் உடுத்துக்கொண்டுவிட்டாயா! ஏ அப்பாடா! வீணுக்கு எத்தனை பட்டுத்துணி உன்மேல் வாரிப் போட்டுக்கொண்டிருக்கிறாய், பெண்ணே! இடம்பத்திற்கு அணிந்துகொள்ளும் உடுப்புக்களிலிருந்து எறிந்ததே வறியவர் எல்லாருக்கும் உடுப்பதற்குப் போதும் என்பதை நான் எவ்வளவுதான் எடுத்துக்காட்டினாலும் இக்காலத்து மடையர்கள் தெரிந்துகொள்ளமாட்டாதவர்களா யிருக்கிறார்களே.

காதேரின்:—நமக்குள்ளே என்ன ஒப்பந்தம் நடந்திருக்கிறதென்பதுதான் உங்களுக்குத்தெரியுமே,அப்பா. காலைவேளையில் நான், என்னுடைய இஷ்டப்படி உடுத்துக்கொண்டுசினேகிதர்களைச்சந்திப்பது; சாயங்காலத்தில் உங்கள் திருப்திக்காகச் சாதாரண உடைகள் தரித்து வீட்டில் இருப்பது.

ஹார்ட்:—நல்லது, இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துப்படி நீ கட்டாயம் நடக்கவேண்டும்........நீ அதற்கு எவ்வளவு கட்டுப்பட்டுநடக்கிறாய் என்பதை இன்றையசாயந்திரமே சோதித்துவிடுவதற்குச் சந்தர்ப்பம் நேரும் என்று நினைக்கிறேன்.

காதேரின்:—நீங்கள் சொல்வது சிறிதுகூடவிளங்கவில்லையே.

ஹார்ட்:—நல்லது, காதெரின், வெளிப்படையாகச் சொல்கின்றேன். உனக்குப் புருஷனாக நான் தேர்ந்திருக்கிற பிள்ளை இன்றைக்கே வருவானென்று எதிர்பார்க்கிறேன். தன் மைந்தன் புறப்பட்டுவிட்டானென்றும், தானும் பிறகு வருவதாகவும் அவன் தந்தையினிடமிருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது.

காதேரின்:—அப்படியா! இதைப்பற்றி எனக்கு முன்னேயே ஏதாவது தெரிந்திருக்கப்படாதா. நான் அவருக்கெதிரே என்னவிதமாக நடந்துகொள்வேன்? ஆயிரத்தில் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றென்பது அவரை விரும்பமாட்டேன் என்றே எண்ணுகிறேன். ஒப்புக்கு ஏதேனும் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு மரியாதையாய் இருந்துவிடுவேன், அவ்வளவே. சிநேகத்திற்காவது மதிப்பிற்காவது இடம் ஏற்படாது.

ஹார்ட்:—குழந்தாய், இதை நிச்சயமாகவைத்துக் கொள். உன்னுடைய ஆசைக்கு விரோதமாக நான் ஒன்றும் கட்டாயம் செய்யமாட்டேன். இப்பொழுது நான் உனக்குத் தேர்ந்தெடுத்திருக்கிற மார்லோ என் பழையநண்பர் ஸர் சார்ல்ஸ் மார்லோ என்பவருடைய மகன். அவரைப்பற்றி நானுனக்கு அடிக்கடிசொல்லியிருக்கிறேன். அவர் மகன் இவன் நல்ல படிப்பாளி, இராஜாங்க உத்தியோகத்தில் அமரப்போகின்றான். நல்ல அறிவாளியென்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

காதேரின்:—அப்படியா?

ஹார்ட்:—உதாரகுணம் நிரம்பியவன்.

காதேரின்:-அவரை நான்விரும்புவேன்போல்தோன்றுகிறதே.

ஹார்ட்:—இள வயது, தைரியசாலி.

காதேரின்:--அவரை நான் நிச்சயம் விரும்புவேன்.

ஹார்ட்:—நிரம்ப அழகும் உடையவன்.

காதேரின்:—அப்பா, மேலொன்றும் சொல்லவேண்டாம். எனக்குத்தான் அவர்; அவரை ஏற்றுக்கொண்டுவிட்டேன் நான்.

ஹார்ட்:—காதெரின், இதற்கெல்லாம் மேலே, அவன், நிரம்பக் கூச்ச முள்ளவன். எல்லாரோடும் கலகலவென்று கலந்துபேசுகின்ற குணம் அவனுக்கு இல்லை.

காதேரின்:—ஆகாகா, உருகிய என் மனம் மறுபடி உறைந்துவிட்டதே. கலகலப்பில்லாதவன் என்ற அந்தச் சொல் அவருடைய மற்ற எல்லா நலன்களேயும் கெடுத்துவிட்டது. கலகலப்பில்லாத காதலன், சந்தேகமுடைய கணவன் ஆவான் என்று சொல்வார்களே.

ஹார்ட்:—அப்படி இல்லை. மற்ற நற்குணச் செல்வங்கள்இல்லாத ஒருவனிடத்தில்அடக்கமும் இருக்காது. அவனுடைய இந்த அம்சந்தான் முதல் முதல் என் நாட்டத்தைக் கவர்ந்தது.

காதேரின்:—என்னுடைய நாட்டத்தைக் கவர்வதற்கு இதனினும் பகட்டான அம்சங்கள் அவரிடம் இருக்கவேண்டும். ஆயினும், அத்தனை இளமையும், அத்தனை அழகும், அத்தனை நீங்கள் சொல்கிற எல்லாமும் இருக்குமானல், ஏதோ, போதும். நல்லது, அவரை ஏற்றுக்கொள்வேன் என்று நினைக்கிறேன்.

ஹார்ட்:—ஆமாம், காதெரின், இன்னமும் ஒரு தடை யிருக்கிறதே. நூற்றுக்குநூறு அவன் உன்னை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடலாமே.

காதேரின்:-ஏனே அப்பா என்னை நீங்கள் இப்படி அவமானப் படுத்தவேண்டும்? நல்லது, அவர் என்னை மறுத்துவிட்டால், அந்த அலக்ஷியத்திற்காக வருந்தி என் இதயத்தை உடைத்துக்கொள்வதற்குப்பதிலாக, என்னை வீணிற்கு முகஸ்துதிசெய்திருந்த என் நிலைக் கண்ணாடியை உடைத்தெறிந்துவிட்டு,புதியமாதிரி உடுப்புக்களை அணிந்துகொண்டு அவரினும் சுலபமான காதலன் வேறு கிடைப்பானே பார்க்கிறேன்.

ஹார்ட்:—இதுதான் தீரமான தீர்மானம்! இதற்கிடையில், அவனை வரவேற்பதற்குத் தகுந்தபடி நம் வேலைக்காரர்களை ஆயத்தம் செய்துவைக்கவேண்டும். நம் வீட்டிற்கு வருவார் போவார் அதிகம் இல்லாததால், அன்னியர்முன் எப்படி நடந்துகொள்வதென்பது நம் வேலைக்காரர்களுக்குத் தெரிவதில்லை.

[போகிருர்.]

காதேரின்:—அட தெய்வமே, அப்பா சொன்ன இந்தச் செய்தி என்னை என்னவோ பரபரக்கச் செய்கிறதே. இளமை அழகு, இவைகளை அவர்கடைசியில் போட்டார். நானே அவைகளைத்தான் முதலில்வைக்கிறேன். புத்திசாலி, நல்லகுணம். அதெல்லாம் எனக்கும் ஆசைதான். ஆனல், கூச்சமுடையவனுமே! கோட்டான் மாதிரி உட்கார்ந்திருப்பானுமே—இது அவனுக்கு நிரம்ப விரோதமாக இருக்கிறது. இருந்தாலுமென்ன? தன் பெண்டாட்டியைப்பற்றிப் பெருமைகொள்ள நான் கற்பித்துவைத்து அவன் கூச்சத்தை ஓட்டிவிடமுடியாதா? ஆமாம், நான் நினைத்தால்-இதென்ன விது! காதலன் கைக்கெட்டுமுன் அகமுடையானை ஆட்டிவைக்கிறேனே.

[நெவில்லி வருகிருள். இவள் போரதியின் உறவினள், இவ்வீட்டில் வளர்பவள்]

காதேரின்:—நீ வந்தது நிரம்ப சந்தோஷம். நெவில்லி, இன்றுமாலை என்னைப் பார்த்தால் எப்படியிருக்கிறது, சொல், என்கண்ணே. ஏதாவது விபரீதமாகத் தோன்றுகிறதா? நான் அழகாகத் தென்படுகிற நாள்களில் இது ஒன்ரு? இன்றைக்கு என்முகம் காட்டக்கூடியதாக இருக்கிறதா, என் செல்வமே, சொல்.

நேவில்லி:—என் அன்பே, திவ்வியமாயிருக்கிறது. இருஇரு, இன்னுமொருதரம் பார்ப்போம்! என்ன இது! நீ வளர்க்கும் கின்னரிப்பக்ஷிகளுக்காவது பொன்மீன்களுக்காவது, ஆபத்துஏதேனும் நேர்ந்துவிட்டதா? உன் பூனையோ அல்லது உன் தமையனே தொந்தரை செய்ததா? அல்லது நீ கடைசியாகப் படித்துக்கொண்டிருந்த நாவல் உன்னை இப்படி அசைத்துவிட்டதா?

காதேரின்:—இல்லை,இவைகளில் ஒன்றும் இல்லை. என்னைப் பயமுறுத்திவிட்டார்கள்—அதிலிருந்து இன்னம் தேறமுடியவில்லை—ஒரு காதலனைக்கொண்டு என்னைப் பயமுறுத்திவிட்டார்கள்.

நேவில்லி:—அவர் பேரோ?

காதேரின்:—மார்லோ.

நேவில்லி:—அப்படியா!

காதேரின்:—ஸர் சார்லெஸ் மார்லோவின் புதல்வர்.

நேவில்லி:—என்னை அன்புடன் வியந்திருக்கின்ற ஹேஸ்டிங்ஸின் நெருங்கிய நண்பர் அவர். ஒரு போதும் அவ்விருவரும் பிரிந்திருப்பதில்லை. நாம் பட்டினத்தில் வசித்தபோது நீ அவரைப் பார்த்திருக்க வேண்டுமென்று எண்ணுகின்றேன்.

காதேரின்:—பார்த்ததே இல்லையே.

நேவில்லி:—சொல்லுகிறேன் காதுகொடுத்துக்கேள். அவர் குணம் மிகவும் விசித்திரமானது. நல்ல பெயரும் கற்பும்உடைய குடும்பத்துப் பெண்களின் இடையில் இவரைவிட அடக்கமுடையவர் இதுவரையில் ஒருவரும் பிறந்ததில்லையென்னலாம். ஆனல், வேறுவகையான மாதர்களுக்கு நடுவிலோ இவர் நடத்தை முற்றி

னும் மாருக இருக்கிறதென்று அவரை அறிந்திருப்பவர் சொல்கிருர்கள். நான் சொல்வது உனக்கு விளங்குகிறதோ?

காதேரின்:—மிகவும் விசித்திரமாகத்தான் இருக்கிறது இந்தக் குணம்! இவரை வைத்துக் கையாள என்னல் முடியப்போவதே இல்லை. என்னசெய்வேன் நான்? சீச்சி! அவரைப்பற்றி இனி ஒன்றும் நினைக்காமல், நடக்கின்றபடி நடக்கட்டும் என்று நம்பியிருந்துவிடவேண்டியதுதான். இது இருக்கட்டும்; என் அன்பே, உன்செய்தி எவ்வளவில் இருக்கிறது? என் அண்ணன் டோனிக்காக எனது தாயார் தானே உன்னை வழக்கம்போல் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருக்கிருளோ?

நேவில்லி:-இப்பொழுதுதான்சுவாரசியமான இரகசியங்கள் அவளுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு வருகிறேன். பசுமையான வார்த்தைகள் பல சொல்லித் தன்செல்வக்குரங்கைச் சகலகுணசம்பன்னனென்று சாதிக்கப் பார்க்கிருள்.

காதேரின்:—அவளுக்கிருக்கிற ஆசையால் அப்படியே நினைக்கவும் நினைக்கிருள். உனக்குஇருக்கிறஆஸ்தியைப்போன்ற ஒரு ஆஸ்த்தி கொஞ்சமா மயக்கும்! அதுவுமன்றி, அந்த ஆஸ்த்தியையெல்லாம் தனியே அவள் இப்பொழுது கையாண்டுவருகிருளாகையால், குடும்பத்தைவிட்டுஅது வெளியேபோய்விட இஷ்டப்படாதது ஒன்றும் ஆச்சரியமில்லை.

நேவில்லி:—பெரும்பாலும் நகைகளாகவே இருக்கிற என்னுடைய ஆஸ்த்தி அத்தனை அதிகம்ஒருவரையும் மயக்கிவிடாதென்று எண்ணுகிறேன். எனினும், என் அருமை ஹேஸ்டிங்ஸ் மாத்திரம் திடமாயிருப்பாராளுல் இவளெண்ணம் கைகூடுவது கடைசியில் மிகவும் கடினமாய்விடும் என்பதிற் சந்தேகமில்லை. இதற்கிடையில், தன் பிள்ளையினிடத்தில் நான் ஆசை வைத்திருக்கிறேனென்று அவள் எண்ணியிருக்கும்படி நடந்துகொள்கிறேன். என்னுடைய அன்பு வேறொருவரிடத்தில் வைக்கப்பட்டிருக்கிற தென்பதை அவள் இதுவரையில் கனவிற்கூட எண்ணிச் சந்தேகப்பட்டதில்லை.

காதேரின்:—என் நல்ல அண்ணன் திடமாக நிற்கிறுன். உன்னை இப்படிச் சலிக்காமல் வெறுப்பதற்காகஅவன்எனக்கு உண்மையில் அருமையாய்விடுவானென்றுகூடத் தோன்றுகிறது.

நேவில்லி:—பார்க்கப்போனல் அதன் சுபாவம் கடைசியில் நிரம்ப நல்ல சுபாவம். தன்னைத் தவிர வேறு யாருக்கு என்னைக் கலியாணம் செய்துகொடுத்தாலும் அதற்குச் சந்தோஷந்தான். இதோ, அத்தை கூப்பிடுகிருள். போவோம். நம்முடைய நிலைமை இக்கட்டாக இருக்கிறது. தைரியம் வேண்டும்.

காதேரின்:—எல்லாம் எப்படி முடியமோ என்று எனக்கு ஏக்கமாயிருக்கிறது.

[போகின்றனர்]

முதல் களம் முற்றும்.

ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

III. ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி ஸ்தோத்திரங்கள்.

[182-வது பக்கத் தொடர்ச்சி]

3. ராகம்—காம்போஜி] [தாளம்—ஆதி.

பல்லவி

ஓரங்க சாயி பிலசிதே—ஓ யநுசு ராராதா..........................(ஓ)

அநுபல்லவி

ஸாரங்க தருடு ஜூசி—கைலாஸா திபுடுகா லேதா..........................(ஓ)

சரணம்

பூலோக வைகுண்ட மிதியனி—நீலோன நீவே யுப்பொங்கி
ஸ்ரீலோலுடை யுண்டே மா—சிந்த தீரேதென்னடோ
மேலோர்வ லேநி ஜநுல லோநே—மிகுல நொகிலி திவ்யரூபமுந-முத்—
யால ஸருல யுரமுநு கநவச்சிதி—த்யாகராஜ ஹ்ருத்பூஷண........................(ஓ)

பொருள்.

ஓ ரங்கசாயீ - ஓ ரங்கநாதப் பெருமானே! பிலசிதே - உன்னையழைத்தால், ஓ யநுசு ராராதா - ஏனென்று கேட்டு வரக் கூடாதா?

ஸாரங்க தருடு ஜூசி - மானை யேந்திக்கொண்டிருக்கும் சிவபெருமான் உன்னைத் தரிசித்து, கைலாஸாதி புடுகா லேதா - கைலாஸத்தின் அதிபதியாய் விளங்கவில்லையா?

பூலோக வைகுண்டமு இதி யநி - பூலோக வைகுண்டமிதுவே யென்று எண்ணி. நீலோந நீவே உப்பொங்கி- உனக்குள் நீயே மகிழ்ச்சியடைந்து, ஸ்ரீலோலுடை யுண்டே - ஸ்ரீலோலனு யிருந்துவிட்டால், மா சிந்த தீரே தென்னடோ-எங்களுடைய குறை தீருவது எக்காளோ, த்யாகராஜ ஹ்ருத் பூஷண-த்யாகராஜனுடைய ஹ்ருதயத்தை அலங்கரிப்பவனே! மேலோர்வ ஜநுலலோ - பாமர ஜனங்களிடையே, நேநு - நான், மிகுல நொகிலி-மிகவும் ஈடுபட்டு, திவ்ய ரூபமுந - உன் திவ்ய மங்கள ரூபத்துடன், முத்யால ஸருல உரமுநு - முத்துஸரங்களினுல் அலங்கரிக்கப் பட்டு விளங்கும் உன் வக்ஷஸ்தலத்தை (மார்புப் பிரதேசத்தை), கந வச்சிதி - கண்டு களிக்கும் பொருட்டு வந்தேன்.

காம்போஜி ராகலக்ஷணம்

இவ்விராகம் 72 மேளகர்த்தாக் கிரமப்படி 28-வது மேளகர்த்தாவான ஹரிகாம்போஜியில் ஜன்யம். ஷாடவ ஸம்பூர்ணம், ஆரோஹணத்தில் நிஷாதம் வர்ஜ்யம். மிகவும் விஸ்தாரமாகப் பாடும் ரக்திராகங்களில் இது ஒன்று. ஸரிகமபத ஸ்நிபாதாஸ்ா என்ற பிரயோகமும் விசேஷமாக வழங்குகின்றது. இவ்வாறு ஸ்நிபதஸா என்று வழங்கும்போது கிரமப்பிரகாரம் கைசிகி நிஷாதம் பேசாமல் காகலீ நிஷாதமே பேசுகின்றது. ஆகையால் இது பாஷாங்க ராகமாகும். மகபதஸ் - ரிமகஸ - ரிபமகஸ - முதலிய பிரயோகங்கள் இந்த ராகத்துக்குச் சிறந்த அழகைத்தருகின்றன. ஸர்வஸ்வர கமகவரிக ரக்திராகம். மாலையிற்பாடத் தகுந்தது என்று பொதுவாக அறிஞர் அபிப்பிராயப் படுகின்றன ரெனினும்; எப்போதும் பாடத்தகுந்ததே.

ஆரோஹணம் - ஸரிகமபதஸ்
அவரோஹணம் - ஸ்நிதபமகரிஸ.

ஸ்வர ஸாஹித்யம்

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.

; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.

| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.

|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.

* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்பட்டிருக்கும்.

ஸரிகம— மேற்படி ஸஞ்ஜ்ஞையிற் கூறப்பட்டிருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.

பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

ஸ்ரீக்ம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தயாயைக் குறிப்பிடும்.

[குறிபபு:—இக் கீர்த்தனத்தை மிகவும் சவுக்கமான காலத்திற் பாடவேண்டும்.]

பல்லவி.

ஸாரீகாரீ—ரீகாமாகா —ரீஸா - ரிகமககரி—ஸாஸா; | நீபாதா ; ஸ்ா ; ; ; | ஸாரீகாமா —காரீஸா ; ||
ஓ . . . — . . . . . — . . - . . . . . . —ரங்க ; | சா . . ; யீ ; ; ; | பி . ல . —சி . தே ; ||

ஸா,ரிகாரீ—ரீகமகாரீ—ரீஸா - ரிகமககரி—ஸாஸா; | நீபாதா ; ஸா : ; ; | ஸாமாமககரி—கரிகாரீஸா; ||
ஓ, . . . — . . . . . — . . - . . . . . . —ரங்க ; | சா . . ; யீ ; ; ; | பி . ல . . . — சி . தே . ; ||

ஸா ரிக —ரீகம —காமப- காரீரீஸா —ரிகமககரி—ஸாஸா; | நீபாதா ; ஸா ; ; ; | ஸாமாமககரி-ரீகாரீஸா ||
ஓ . . — . . . — . . . — . . . — . . : . . . —ரங்க ; | சா . . ; யீ ; ; ; | பி . ல . . . -சி .தே. ||

ஸாரிக—ரீகம - காமப—கமரிகஸா ; — ரிகமககரி—ஸாஸா ; | நீபாதா ; ஸா ; ; ; | ஸாமாமககரி—காமாபா; ||
ஓ . . — . . . . - . . . — . . . . . ; — . . . . . . —ரங்க ; | சா . . ; யீ ; ; ; | பி . ல . . . —சி . தே ; ||

நீதாதாபா—பாமாமாகா—ரீஸா—ரிகமககரி—ஸாஸா; | நீபாதா; ஸா ; ; ; | ஸாமாமககரி—காமாபா ; ||
ஓ . . . — . . . . — . . — . . . . . . —ரங்க ; | சா . . ; யீ ; ; ; | பி . ல . . . —சி . தே ; ||

தா ; ; தா ; ; — தாபாதாநீதா ; பாதநிதாமா | மாபதபா ; — பாதநிதாநீ | பா ; ; ; — மாகாகாரீ ||
ஓ ; ; . ; ; — ய . னு . சு ; ரா . . . . | ரா . . . ; — . . . . . | தா ; ; ; — . . . . . ||

ஸாரிக—ரீகம—காமக—ரீகரி—ஸாரிகமககரிஸா—ஸாஸா; | நீபாதா; ஸா ; ; ; | ஸாமாமககரி—காமாபா; ||
ஓ . . — . . . — . . . - . . . — . . . . —ரங்க ; | சா . . ; யீ ; ; ; | பி . ல . . . —சி . தே; ||

தா ; ; தா ; ; — தாபாதாநீதா; பா, தஸ்ாநீ | பா, தஸ்ாதாஸ்ா ; ; ; | நீ தாதாபா—மாகாகாரீ ||
ஓ ; ; . ; ; — ய . னு . சு ; ரா, . . . | ரா, ... ; ; ; | தா . . . — . . . . ||

ஸாரிக—ரீகம - காமப—கமரிக—ஸரிகமபாபா மகரீஸாஸா | நீபாதா; ஸா ; ; ; | ஸாமாமககரி—காமாபா ; ||
ஓ . . — . . . - . . — . . . — . . . . ரங்க | சா . . ; யீ ; ; ; | பி . ல . . . —சி . தே ; ||

ஸா ; ; ; நீ ; தா ; தாநீதா ; பா,தஸ்ாநீ | பா,தஸ்ாதாஸ்ா ; ; ; | நீதாதாபா—மாகாகாரீ ||
ஓ ; ; ; . ; ய ; நு . சு ; ரா, . . . | ரா, ... ; ; ; | தா . . . — . . . . ||

ஸாரிக—ரீகம - காமப-கமரிக—ஸரிகமபதஸ்ா—ஸ்நிதபமகரிஸ | நீபாதா; ஸா ; ; ; | ஸாமாமககரி—காமாபா; ||
ஓ . . — . . . - . . . - . . . — . . . . . . — . . . . ரங்.க | சா . . ; யீ ; ; ; | பி . ல . . . —சி . தே ; ||

ஸ்ா ; ; ; — நீ ; தா ; தாநீதா ; — பா,தஸ்ா நீ | பா,தஸ்ாரிக்ரீஸ்ாநீதா | பாதநிதாபாமாக—ரீகம ||
ஓ ; ; ; — . ; ய ; நு . சு ; — ரா, . . . | ரா, ... | தா . . . . . . — . . . ||

காரீ * ஸாரிக - ரீகம - காமப - கமரிகஸா - ரிகமககரிஸாஸா | நீபாதா ; ஸா ; ; ; | ; ; ; ;—; ; ; ; ; ||
. . * ஓ . . - . . . - . . - . . . . . - . . . . ரங்க | சா . . ; யீ ; ; ; | ; ; ; ;—; ; ; ; ; ||

அநுபல்லவி.

மாபா—தாநிதபா ; தாநித பாதபமா; மாகாமா ; | பா ; மாபாதாநிதபா : | தா ; ; ;—நீ தாதாபா ||
ஸா . — . . . ; ரங் . . . . . க ; த . ரு ; | டு ; ஜு . . . சி ; | கை; ; ;—லா . . . ||

மாபா—தாநிதபா ; பதநித மபதபமா; மாகாமா ; | பா ; மாபாதாநிதபா ; | பா,தஸ்ா;—நீ தாதாபா ||
ஸா . — . . . . ; ரங் . . . . க ; த . ரு ; | டு : ஜு . . . . சி ; | கை, . . ;— லா . . . ||

மாபா ஸ்ாநீதாபா—பதநித—மபதபமா; மாகாமா ; | பா ; மாபாதாநிதபா ; | பாதாஸ்ாரீஸ்ாநீதாபா ||
ஸா . . . . . —ரங் . . . — . . . க ; த . ரு ; | டு ; ஜு . . . . சி ; | கை . . . லா . . . ||

தாரீஸ்ாநீதாபா —பதநித—மபதபமா; மா கா மா; | பா ; மாபா தாநிதபா ; | நீபாதாஸ்ா ரீ ; ; ; ||
ஸா . . . . . . —ரங் . . . — . . . . க ; த . ரு ; | டு ; ஜு . . . . சி ; | கை . . . . . ; ; ; ||

க்ாம்க்ரீக்ரிஸ்ா ; —நீ தா தா பா தா ; தாரீ ரிஸ் நீ | நீபாதாஸ்ா ; மா; பத நித | ம; மக கா க ரி ரீ ரீஸா ||
ஸா . . . . . ; —தி . பு . டு ; கா . . . . | . . . . ;லே; . . . . | . ; தா . . . . ||

(ஓரங்கசாயீ)

சரணம்

மா ; ; ; ; ; ; — கா, ம பா; பா ; மா பா தா நி த | பா; தா ; ; தா ; ; | தா பா நீ தா தா ; பா ||
பூ ; ; ; ; ; ; —லோ, . . ; க ; வை . . . . | . ; குண் ; ; ட ; ; | மி . தி - ய ; நி ||

நீ தா நீ தா நீ பா—நீ தா தா பா மா;—மா பா தா நி த | பா ; தா ; ; தா ; ; | பாதாஸ்ா; நீ நீ தா ; ||
பூ . . . . . . —லோ . . . க ; —வை . . . . . | . ; குண் ; ; ட ; ; | மி . தி ; ய . நி ; ||

ஸா ரீ கா மா பா தா—நீ நீ தா தா பா மா—மாபாதாநிந
பூ . . . . . . —லோ . . க . . —வை . . . .

தா ; ; ;- தா நிதபா ;—பாநிதமா ;- மா பா — ம ப தா
நீ ; ; ;- லோ . . . ;— . . . ந ;- நீ . — . . .

பா,தஸா; - நீ ; தா ; பாதநிதா; தாநீபா ;
ஸ்ரீ, . . ; - லோ; . ; லு . . . ; டை . . ;

நீ தாதாபாபாமா - மாகாகாரீஸா ; நீபாதா ;
சிந் . . . த . - தீ . . . ரே ; . . . ;

மாகாகாரீஸா ; நீதாதாபாமா; - காமாகமபா
மே . . . . ; லோ . . ர் வ ; - லே . . . .

;* நீதாதாபா - பாமாநீதாபா ; மாபா - மபதா
;* மிகுல . - கொ . கி . லி ; தி . - . . .வ்

;* பாதாஸ்ா ; - தாஸ்ாரீ; ரி; - ரீக்ாம்ாக்ா
;* த்யா · ல ; - ஸ · ரு ; ல; - யு . ர .

க்ாம்க் - ரீக்ரிஸ்ா - நீதாபாதாஸ்ா; - தாரீரிஸ்ா
த்யா - . . . க - ரா . . . ஜ ; - ஹ்ரு . . .

(ஓ ரங்கசாயீ)

| பா ; — தா ; ; தா ; ; | பா தா ஸா ; நீ நீ தா ; ||
| . ; —குண் ; ; ட ; ; | மி . தி ; ய . நி ; ||

| தா ; —மாபா ;; பா மா | பா,த ஸ்ா ; நீ ; நிததா ||
| வே; — . . ;; யுப் . | பொ, . . ; ங்கி; . . . ||

| மாபாதாநிதபா; - பமகா | கா; பாமாபா ; ; ; ||
| யு . . . . . ண்; -டே . . | . ; மா . . ; ; ; ||

| ஸா,ரிகாரீ ; ; கரி | ரீ ; ; ; - ஸா ; ; ; ||
| தெ,ன்ன. ; ; டோ | . ; ; ; - . ; ; ; ||

| பா; மாபாதாநிதபா | பா ,தஸ்ா; நீ; நிததா ||
| நி ; ஜ . னு . . ல | லோ, . . ; . ; நே. . ||

| தா; பாமாபா; பா; | பா, தஸ்ா; நீ; நிததா ||
| ய ; ரூ . . ; ப ; | மு, . . ; ந; மு . . ||

| ரீக்ாம்ாக்ாக்ாரீஸ்ா; | ஸ்ாநீதா; -பாதாஸ்ாரீ ||
| மு . ந . க . ந ; | வ . . ; -ச்சி . தி . ||

| நீதாபாதாஸ்ா; - மாபா | தாநீதாபா -மாகாகாரீ ||
| . . . . த் ; - பூ . | . . . . -ஷ . ண . ||

மனிதவாழ்க்கை

மனிதன் வேதாந்தம்பேசிப் பேச்சளவிலேயே நின்று உலகத்தைப் பாழாக்குகின்றான்; அவனது வாய் வேதாந்தம் செய்கையிலும் செல்லுமாயின், அதனால் உலகத்திற்கு நன்மை உண்டு.

மனிதன் பகுத்தறி வொன்றினாலேயே மற்ற மிருகங்களிலும் சிறந்தவனாகின்றான்; அந்த அறிவிலும் அவன் தன்னைத்தானே துருவி யறிவதே (Introspection) சிறந்ததாயிருக்கிறது. அதே அவனுடைய மிருக உணர்ச்சிகளைத் தேய்த்துத் தெய்வீகத் தன்மையைப் பெருக்க உதவுகிறது.

அன்பே சிவம் என்றார் திருமூலர்; செம்பொருள் மெய்ப்பொருள் என்றார் தெய்வத்தைத் திருவள்ளுவர்; மெய்யே தெய்வம் என்கின்றார் காந்தியடிகள்; நியதியே தெய்வம் என்பார் சிலர். இவைகளின் இவ்வுலக ஆட்சியையும், இவைகளால் இவ்வுலக மாளப்படவேண்டும் என்பதையும் எவராலும் மறுத்தற்கு இயலாது. ஆகவே ஒவ்வொருவனும் தெய்வம் பேணவும் வேண்டும்; அன்பு ததும்பிய மெய்நெறி பற்றியேயொழுகவும் வேண்டும். அதுவே நியதியின் வழியே செல்லுதலு மாகும்.

ஈஸ்வரனே எங்கு முள்ளவன்; அன்புமயமாயும் இன்பச் சொரூபியாயு மிருப்பவன். துன்பம் விரவாத பயவாத நிலைமையே இன்பநிலையாகும். அவ்வித இன்பமும் நிலைத்த இன்பமாய் அமைவதை ஈஸ்வரன் ஒருவனிடத்திலேயே நாம் காணமுடியும். "நடமாடக்கோயில்நம்பர்க் கொன்றிங் கீயில் படமாடக்கோயில் பரமர்க்கங் காம்" என்றபடி மனிதனாகி இருப்பவன் தன் அறிவையும் உழைப்பையும் செல்வத்தையும் பிறர்க்கும் பயன்படச்செய்வதினாலும், பிறரது துக்கத்தையும் துன்பத்தையும் போக்குதலினாலும், அகந்தை, பொறாமை, பகைமை, வஞ்சகம், மோசம் முதலிய துர்க்குணங்களைக் களைந்தும் அன்புசுரந்தும் நிற்றலினாலும் தன்னை ஈஸ்வரனிடத்தில் காண்கின்றான்; அதுவே அவனுக்கும் அவன் முயற்சியில் சம்பந்தப்படுகின்றவர்களுக்கும் பேரானந்தத்தை விளைவிக்கிறது.

மேலே சொல்லியபடி மனிதன் தன்னைப்போலவே பிற ஜீவராசிகளையும் பேணுதலே யறம். அதையும் அவன் விருப்பு வெறுப்பு இல்லாமலும் பலனை எதிர்பாராமலும் செய்யவேண்டியவனா யிருக்கின்றான். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்றுகூறினர் அப்பர் சுவாமிகளும். அறத்திற்கு முரணான ஆசையும் அதனால் தூண்டப்பெறும் செய்கைகளுமே, மனிதனை அவதிப்படுத்துகின்றன. இதுபற்றியே 'ஈசனோ டாயினும் ஆசையறுமின்கள்' என்றார் திருமூலரும். இயற்கையாகவே கூத்தாடும்குரங்கு வெறியுங்கொண்டால் கேட்கவும் வேண்டுமோ? அது ஒடுமொரு பாம்பைக் கையால் இறுகப்பிடிக்க, தன்னைத்தப்புவித்துக்கொள்வதற்காக அப்பாம்பு குரங்கைக்கடிக்க, பாம்பை இறுகப்பிடித்திருப்பதால் வந்தவினை இதென்று குரங்குணராமல் இன்னும் அதை இறுகப்பிடிக்க உயிர்போமளவும் அது கடிக்கவும் இதுபின்னும் கூத்தாடவுமாகக் குரங்கின் உயிரோடு முடிகிறது. மனிதனுடைய ஆசையாகிய மனக்குரங்கும் இப்படியே துன்பந்தருகின்ற பொருள்களையும் செயல்களையும் விரும்பியே வெறிகொண்டு மாய்கின்றது.

ஈஸ்வரன் நமது அப்பன், தாயுமானவன்; நாமெல்லாரும் அவன் மக்கள்; அவனுக்கு, மக்களிடம் ஓரவஞ்சகம் இல்லை; அவனுக்குக் கருப்பனும் சரி வெள்ளையனும்சரி; அவனுடைய சூரியனும் மற்றும் பெரும் பூதங்களும் உலகமெங்கும் பலதரமான சீதோஷ்ணஸ்திதிகளையும் அதற்குத் தக்கபடி மக்களுக்கு வேண்டிய சௌகரியங்களனைத்தையும் செய்கின்றன; இப்போதைய விளைவும் மக்கள் எல்லோர்க்கும் போதும்; இனி மக்கள் பெருத்தாலும் அத்தனைக்கும் போதியமாசூல் விளையும். வலுத்தவன்தான் வாழ்தற்கு உரியவனென்று மனத்திற்கொண்ட மக்கள்சிலர் பிறரைக் கெடுத்தாயினும் தாம்வாழவும், மற்றவர்களுடைய காணிகளையும் பொருளையும் தந்திரமாய் அபகரித்துக் கொள்ளவும் முயல்வதுமன்றி அவர்களைத் தங்களோடு வாழவும்விடாமல் தடுக்கின்றவர்களாகவும்இருக்கிறார்கள். தன்வினை தன்னைச் சுடும் என்றும் ஓட்டப்பமும் வீட்டைச் சுடுமென்றும் ஈஸ்வரன் அறிவுறுத்தியிருக்கிறான்; அறிவுறுத்துகிறான். ஏன்றாலும் பகல் வெளிச்சம் போட்டும், கனல் போட்டும் இயற்கையோடு போராடியும் சேனை தளவாடங்கள் சேர்த்து மஞ்சளையும்கரியாக்கிப் பிறரையும்கொன்று துன்புறு

த்தியும் தானும்கடன்பட்டுக் கஷ்டத்திற்குள்ளாகியும் மாய்ந்துகொண்டிருக்கின்றார்கள். நாடு செழிக்கக் கேடில்லை யென்றபடி, மனிதசமூகமெல்லாம்வாழத் தாங்களும் கேடில்லாமல் வாழலாமென்பதை உணர்கிறார்களில்லை.

மனிதன் தன் உடன்பிறந்தார் வாழ்வில்கூட விருப்பில்லாமலும்சிலசமயம் வெறுப்புக்கூடக் கொண்டவனுமிருக்கும்படி அவன்போற்றும்மூதுரைஅவனுக்கு உடன்பிறந்தார் சுற்றத்தா ரென் றிருக்கவேண்டா வென்று போதிக்கிறது. அவனுடைய சமயாசாரியர்களிடத்திலும் விரிந்தநோக்கமும் சகிப்பும் இல்லாதிருக்க, மனித சமூகமெல்லாம் நல்வாழ்வு வாழ அவன் உதவிசெய்வதெப்படி? என்றாலும் அவன் தெரிந்தும் தெரியாமலும் தன்னலமே பேணுவதில் செய்கின்ற அக்கிரமங்களின் பலனை அவன் அனுபவிக்காமல் தீராது. இதுபற்றியே, மறந்தும் பிறன் கேடு சூழற்க, என்றார் திருவள்ளுவரும். பிறர்க் கின்னா முற்பகல் நினைக்கில் தனக்கின்னா பிற்பகல் விளைவதுறுதி; எளியாரை வலியா ரடித்தால், வலியாரை வாசற்படியடிக்கும் என்பது அனுபவப் பழமொழி.

எந்த ஜீவராசியும் சுகமாய் வாழ்வதற்கு உரிய கதிரும், காற்றும், தண்ணீரும், உணவும் அவசியமாயிருக்கின்றன: மனிதன் அவைகளோடு தனக்கு ஆடையையும் அவசியமாக்கிக் கொண்டிருக்கிறான். ஆனால், அவன், மற்றைய ஜீவராசிகள் சூரிய கதிரையும், காற்றையும், தண்ணீரையும் அனுபவிக்கும் அளவுகூட அனுபவிக்கிறதில்லை. அதனால் மற்றைய ஜீவராசிகளுக்கு உள்ள சுகவாழ்வும் அவனுக்கில்லை. காசு பணம் செலவில்லாது ஆனந்தமாய் அனுபவிக்கக்கூடியஇயற்கைச் சௌகரியங்களையும் அழகையும் கூட அனுபவிக்கிறதற்கில்லாமல் மனிதன் செயற்கைத் தேவைகளை அதிகப்படுத்திக்கொண்டே போய் அவதிப்படுகிறான்.

சூரியகதிர் வியாதி வராமல் தடுக்கிறது; வந்த வியாதியைப்போக்குகிறது; புத்துயிரளித்து ஆயுளைப் பெருக்குகின்றது; காற்றுஆரோக்கியத்தைத் தருகின்றது. தண்ணீர் உச்சிமுதல் உள்ளங்கால் வரையுள்ள சூட்டையாற்றுகிறது; மலஜலம்பிரிக்கிறதுஇரத்தப்பெருக்கை நிறுத்துகிறது, மயக்கத்தைத்தெளிவிக்கிறது, கவலையை நீக்குகிறது, உடலையும் வளர்க்கிறது. இயற்கை வாழ்வு வாழ்பவனுக்கு வைத்தியம் வேண்டியதில்லை.

மற்ற ஜீவராசிகளெல்லாம் தமக்கு வேண்டியவற்றையே தேடிப்பெற்றுச் சுகமாக வாழ்வனவாக இருக்கின்றன; அவைகளின் ஆகாரத்தில் கழிவு அதிகமிருப்பதில்லை; மனிதன் ருசியொன்றையே முக்யமாகக் கருதிச் சத்தில்லாதவைகளையும் வேண்டாதவைகளையும் தின்று ஜீரணக் கருவிகளையும் கெடுத்து ஆயுளையும் சுருக்கிக்கொள்கிறான். தன் வயதுக்கும்உழைப்புக்கும் காலத்திற்கும் நாட்டிற்கும்தகுந்த உணவுகொள்வதில்லை; பால் பழம், காய் கறி கீரைபோன்ற உயிர்ச்சத்து மிகுந்த உணவேனும் கொள்வதில்லை; கெடுதியே செய்கின்ற மாமிசத்தையும், லாகிரி வஸ்துக்களையும் அளவுக்கு மிஞ்சிய பயறுவகைகளையும் கொழுப்பையும் சர்க்கரையையும் சேர்க்காம லிருப்பது மில்லை.

மற்ற ஜீவராசிகளினும் பகுத்தறிவால் மேம்பட்ட மனிதன் கேவலமான மிருகங்கள் பறவைகள்போலவேனும் அவைகளுக்கும் கேவலமாகவேனும் நடந்துகொள்ளாமல் உயரியமிருகங்களையும் பறவைகளையும் போலவேனும் அவைகளைக் காட்டிலும் சிறந்தேனும் ஆண்பெண் சேர்க்கையைக் குறைத்தும் கருத்தரித்த பின் ஒழித்தும் வாழ்வதே தக்கது. அன்றியும் பேடும் போல இணைபிரியாதும் ஒருவர்க்கொருவர் உண்மையாயும் அன்பாயும் வாழவேண்டும்; பெண்களுக்குக் கெர்ப்பத்தின் அசௌகரியங்களும் பிரசவவேதனையும் ஏகதேசம் இவைகளால் மரணமும் ஏற்பட்டாலும் பிள்ளையை வளர்க்கும் சிரமமுமிருந்தாலும்ஆண்களுக்கு விந்தழிவதால் ஆயுள் கட்டையாவதுபோல் அத்தனை அசௌகரியம் பெண்களுக்கு இல்லை. இயற்கையோ டொன்றிய சுறுசுறுப்பான எளியவாழ்க்கையே பெண்கள் வாழ்வதென்றால் கருத்தரித்தபின்னும் சுகமாக வாழலாம், சுகப்பிரசவமும் பெறலாம், பிள்ளை வளர்த்தலும் சிரமமாய்த் தோன்றாது. இப்பவும் ஆடவர்களைக் காட்டிலும் ஸ்திரீகளே அதிகவயது வரை யிருக்கிறார்கள். எந்த நாட்டிலும் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களில் ஸ்திரீகளின் எண்ணிக்கையே அதிகம். புருஷனுக்கு மீசை நரைத்தபின்னும் மனைவிக்குத் தலையும் நரைக்காதிருக்கும் பலரை நாம் பார்க்கலாம். மனிதன், சேர்க்கையைக் குறைப்பதே, தடுப்பதே (passion control) சரியாகுமே யன்றிக் கருப்பத் தடைகள் (birth control) எக்காரணத்தை யிட்டும் நியாயமாகாது. மனிதன் மற்றைய துறைகளில் தன் செய்கையின் தீங்கான விளைவினின்றும் தப்பிக்க முயல்வதைக்காட்டினும் அதிகமான அக்கிரமச் செய்கையாகும், ஜீவவிருத்தியை தடுக்கும் இந்தச் செய்கை.

உண்மையில், செல்வம் என்பது சிந்தையின் நிறைவே யாதலால் செல்வராய்த் திகழவிரும்பும் மனிதன் எவனுக்கும் ஈஸ்வர சிந்தையும் (ஐஸ்வரியம் - ஈஸ்வரனில் பிறந்தது,) நல்லார்வாய்க் கேள்வியும், நற்பழக்கமும் நூற்பயிற்சியும் வேண்டும்; மெய்நெறியே போற்றும் கதைகளும், நாடகங்களும், சினிமாக்களும் பார்க்கத்தக்கன.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மடட ச்யாவனப்ராசா மடடபிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. ஸி. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
மடட ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றமணக்கு எண்ணெ. காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

என் மனைவி எங்கே?:—ஜேன்ஸ் பாலாக் என்னும் விவசாயி ஒருவன் சோவியத் ருஷியாவில் ஒரு குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டு 19 வருஷம் சிறைவாச மிருந்தான். சிறைவாசம் முடிந்ததும தன்சொந்தக் கிராமத்திற்குச் சென்று பார்த்தபோது, அந்தக் கிராமம்முற்றும் அடையாளமே தெரியாமல்மாறுதல் அடைந்திருப்பதைக் கண்டான். பிறகு வீதிவீதியாகச்சென்றுவழியில்காணும்ஒவ்வொருவரையும் 'என் மனைவிஎங்கே" எனக்கேட்டிக்கொண்டேஅலைந்தான் கிராமம் முழுவதும் அலைந்தும் தன் மனைவி கிடைக்காததால், அங்குள்ள ஓர் வீட்டின் தாழ்வாரத்திற்குச் சென்று சற்றுக் களைப்பாறியபின் வீட்டின் ஜன்னலை உற்றுநோக்கினன். தனக்கு விவாகம் நடந்த காலத்தில் தன் மனைவிக்குத் தான் கொடுத்திருந்த சில பொருள்கள் ஜன்னலின் ஓர் மூலையில் இருக்கக் கண்டு, அந்த அடையாளத்தால் அதே தன் வீடெனத் தெரிந்துகொண்டு கதவைத்தட்டினன். கதவைத் தட்டிய உடனே வீட்டிற்குள்ளிருந்த அவன் மனைவி கதவைத் திறந்து பார்த்தபோது வாசற்படியில் தன் கணவன் இருப்பதைக் கண்டு களிகூர்ந்து அந்தநாள் முதற்கொண்டு அவ்விருவரும் இல்லறவாழ்க்கையை மீண்டும் ஆரம்பித்தார்கள்.

* * *

மாய வைரம்:-வடக்கேதாங்தோலின்ஹுமிடத்தில் ஒருபெரிய வைரத்தைஒருவியாபாரிவாங்கினர். அவர் அதனை வாங்கிய நாலுநாட்களுக்குள் அவருக்குமிகுந்த நஷ்டம் ஏற்பட்டது, பெரிய மோட்டார் விபத்தும் ஏற்பட்டது. அவர் உடனே பயந்து ஒரு வக்கீலிடம் கொடுத்தார். அவர் அதனை அணிந்து கொண்ட 12 மணிநேரத்திற்குள் ஒரு மோட்டார் விபத்து ஏற்பட்டது. அவர் உடனே மற்றொரு வக்கீலுக்குக் கொடுத்தார். அந்த வக்கீலின் மனைவி உடனே நோய்கொண்டு இறந்துபோனள். உடனே அந்த வக்கில் அதனைத் தமக்கு கொடுத்த வக்கீல் நண்பரிடம் கொடுக்கப்போய் அவர் இல்லாமையால், அவர் சயமற்காரனிடம் கொடுத்துவிட்டு வந்தார். அதனைச் சமையற்காரன் வாங்கிய இரண்டு மணி நேரத்திற்குள் அவன் தாயாரும் மகனும் தீயால் பொசுக்கப்பட்டுப் போனார்கள். பின் அந்த வைரம் மற்றொரு வக்கீலிடம் போய்ச்சேர்ந்தது. அவர் ஒரு மோட்டார் சைக்கிளில் சென்றபொழுது தண்ணீரில் விழுந்துவிட்டார். இப்பொழுது அந்த வயிரம் ஒரு பார்சி மாதிடம்போய்ச்சேர்ந்திருக்கின்றதாம். அவருக்கு என்ன நேரப்போகிற தென்பது இனித்தான் தெரியவேண்டும்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—
T. ANANTACHARI, Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

உயர்ந்தஜாதி
பழமரக் கன்றுகள்
முறைப்படி வளர்க்கப்படுவன
பழமரங்கள் வைத்து வளர்ப்பதால்
இலாபம்.

அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும். ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.

விலையும் நயம்!
ஜாதியும் உயர்ந்தது! ஒருபோதும் கெடாதது!!

தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது
தேசாயின் பழச்செடி தினுசுகளே.

உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.

நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார்.

D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.
தேசாய் அண்டு கோ.,
17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பாங்களூர்.

D. T. DESAI & Co., { 17, Cross Road Malleswarm BANCALGRE

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனம்! இனம்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)